# தொண்டன்

ஆரம்பம்: 1969-பெப்ரவரி



நவம்பர்- 05

15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

நவம்பர் - 2005

மலர்-37 இதழ்-07

ஆசிரியர்

*J.A.G. இரட்ணகுமார்*

இணை ஆசிரியர்

*மலர்வேந்தன்*

துணை ஆசிரியர்கள்

*மெற்றில்டா இராஜேந்திரம்*

*பெஸ்லியோ வாஸ்*

*ஸ்ரான்லி பிரபாகரன்*

வெளியீடு

*சமூகத் தொடர்பு நிலையம்.*

*திரு/ மட். மறை மாவட்டம்*

முகவரி

*சமூகத் தொடர்பு நிலையம்*

*அ.பெ.எண் - 44*

*மட்டக்களப்பு*

SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

*விலை - 15/=*

*ஆண்டு சந்தா : 250/=*

*ஆறுமாதச் சந்தா : 130/=*

*(தபாற்செலவு உட்பட)*


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| மரணத்திலிருந்து.... | - | 02 |
| கார்த்திகை மாதம்.... | - | 04 |
| இலக்கிய மஞ்சரி | - | 06 |
| கலை தந்த சொந்தம் | - | 08 |
| மாணவர் பக்கம் | - | 10 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 11 |
| மனக்கோலம் | - | 13 |
| தொடர்பாடல் | - | 17 |
| மறை அறிவை வளர்ப்போம் | - | 19 |
| தொண்ணூறாவது அகவை.... | - | 21 |
| மனம்போல் வாழ்வு | - | 22 |
| விவிலியம் கற்போம் | - | 23 |
| பரிசுப்போட்டி | - | 24 |


**அட்டையில்:**

*சுவிர்ச்சலாந்தில் இடம்பெற்ற உலக சிறுவர் தினவிழாவில் பங்கு பற்றிய இலங்கைச் சிறுமியின் நடனம் இயற்கைக் காட்சியின் பின்னனியில்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

இது கார்த்திகை மாதம்!

கல்லறைத் தோட்டங்கள் புதுப்பொலிவு பெறும் மாதம். பிரிந்து சென்ற அன்புக்குரியவர்களை நினைத்து அவர்களது நித்திய வாழ்வுக்காக நெஞ்சுருகி வேண்டுதல்கள் செய்து, வழிபாடுகள் இயற்றி, தான தருமங்கள் செய்து, ஆறுதல் அளிக்கும் - பெறும் காலம் இது.

இறந்தவர்களை நினைப்பதோடு நாமும் ஒரு நாள் இறப்போம் என்ற நினைவையும் அடிக்கடி நெஞ்சில் வைத்துக் கொள்வது நன்று.

இறப்புக்கள் நம்மைச் சுற்றிச் சுற்றி நிகழ்ந்தாலும் நாமும் ஒரு நாள் இறப்போம் என்ற நினைவு நமக்கு பெரும்பாலும் வருவதில்லை. சாவைக் கடந்த வாழ்வை விசுவசிக்கும் நாம் சாவு பற்றிச் சிந்திக்க அஞ்சவேண்டிய தில்லை அல்லவா?

பேராசையும், பொருளாசையும், புகழ்வெறியும், பதவி ஆசையும், நுகர்வு வெறியும் மிகுந்து அதற்காக எத்தகைய அநீதிகளையும் கூடச் செய்து விடத் தயங்காத அளவுக்கு வாழ்வுத்தாகம் நம்மைப் பிடித்தாட்டுகின்றது. இன்றைய சமூக பொருளாதாரச் சூழலும் அதற்குத் துணை செய்கின்றன.

இந்நிலையில் இவை எல்லாவற்றையும் விட்டு நாம் ஒரு நாள் சாகப்போகிறோம், சாவுக்குப்பின்னரான வாழ்வை இன்றைய நமது வாழ்க்கை முறைதான் வடிவமைக்கப் போகிறது என்ற எண்ணத்தை நாம் வரித்துக்கொண்டால் நமக்கு நாமே கடிவாளமிட்டு வாழ்வைப் புதுப்பித்துக் கொள்ள வழி பிறக்கலாம்.

ஏழை இலாசராக வாழ இயலாவிட்டாலும் அந்தக் கொடிய பணக் கார மனதையாவது மாற்றிக் கொள்ளலாமல்லவா?

இங்கேதான் உயிர்ப்பின் வித்துக்கள் முளை விட ஆரம்பிக்கின்றன.

*– இணை ஆசிரியர் –*



## இறைவாக்கு

**வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது;**
**வழியும் மிகக் குறுக்கலானது;**
**இதைக் கண்டுபிடிப்போர் சிலரே.**

*மத் 7:14*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்திலிருந்து மறுவாழ்வுக்கு...



மரணம் என்பது மானிட சமூகத்தின் மாற்ற முடியாத விதி. எப்போது, எங்கே நிகழும் என்ற நிர்ணயங்களுக்குள் அடங்காத இப்பொது விதி, உயிர் களைப் பயமுறுத்துகிறது. மரணம் மிகவும் கொடுமைமிக்கது என மனிதன் வர்ணித்தபோதும், கிறிஸ் தவம் மரணத்தை மறுவாழ்வின் நுழைவாயில் என்று எளிதாகவும் பயமின்றியும் சொல்லி விட்டது. பசியோடிருக்கும் குழந்தைக்குப் பாலூட்டும் தாய் ஒருத்தி மார்பின் ஒரு பக்கத்தில் பால் முடிந்து விட, மறு பக்கத்திற்குக் குழந்தையை மாற்றும் போது குழந்தை கதறி அழுகிறது. அந்த நொடிப் பொழுதில் குழந்தை அனுபவிக்கும் வேதனை யைத்தான் மரணம் நிகழும் போது மனிதன் அனுபவிக்கிறான்: அவ்வளவுதான். அந்தக் கணநேர மரண அனுபவம் தான் மனித குலத்தையே ஆட்டிப் படைக்கின்றது.

ஆனால் மரணத்திற்குப் பிறகு என்ன என்ற தெளிவற்ற நிலையும் மதங்களின் நரகம், மோட்சம், மறுபிறவி என்ற முரண்பாடான பயமறுத்தல்களும் மனிதனை மரணத்தைப் பற்றிய கவலையில் மிகவும் ஆழ்ந்துபோகச் செய்கின்றன. இதைப்பற்றி அறிஞர் ஒருவர் கூறும்போது "சாவினுடைய அவலமான தன்மையானது உலகின் ஒழுங்கின்மைமையைக் காட்டுகின்றது. இந்த ஒழுங்கின்மைதான் பாவத்தின் பலன் என்ற கண்டுபிடிப்பு: ஆனால் இது சமயச் சிந்தனையினுடைய கூரிய ஆயுதங்களில் ஒன்றாகும்" என்கிறார். அதேவேளை கிறிஸ்தவம் நம்பிக்கையூட்டும் சிந்தனையைத் தருகின்றது. அதாவது, இயேசு பாதாளங்களில் இறங்கினார் ஆனால் உயிர்த்தெழுந்தார். அதே போல நாமும் இறந்து பாதளங்களில் இறங்கவேண்டும், அப்போது தான் உயிர்தெழுப்பப்படுவோம். அப்படியானால் அந்தப் பாதாள நிலையில் இறந்தவர் இறைவனை நோக்கி வேண்டுதல் செய்ய முடிவதில்லை, உதவி கேட்க முடியாது, கூவி அழைக்கவும் இயலுவ தில்லை. இந்த நிலையிலுள்ள ஆத்துமங்களின் மீட்புக்காக, விடுதலைக்காக ஜெபிக்க வேண்டுவது தான் இந்தக் கார்த்திகை மாதத்தில் முக்கியமான தெனத் திருச்சபை நம்மைத் தூண்டி வருகின்றது.

நமது நம்பிக்கையின் வேர்கள் எங்கே தொடர்புபட்டிருக்கின்றன? ஆன்மீகம் வற்றி, வறண்டுபோன கற்பாறையான நிலங்களுள்ள உலகத்திலா? அல்லது வளமும் வாழ்வுமான இயேசு என்னும் வற்றாத ஜீவநதியிலா? அந்த ஜீவஊற்று எமக்கு ஊட்டமளிப்பதால் மரணத்துக்குப் பின்னும் நாம் வாழலாம், வாழ்வோம். ஆண்டவரே இந்த உறுதிமொழியை நமக்கு வழங்கியுள்ளார். "உயிர்த்தெழுத லும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான் 11:25)

ஒருமுறை ஒருவன் தன்னுடைய மரணச் சடங்கின் போது இருபது நிமிடங்கள் உரையாற்றினான்! அதாவது, அவன் மரணிப் பதற்கு முன் தனது மரணச் சடங்கின்போது, அதிற் கலந்து கொள்பவர்கள் கேட்பதற்காகத் தான் சொல்ல நினைத்தவற்றை ஒலிநாடாவில் பதிவு செய்திருந்தான். அவனுடைய உரையில் இவ்வாறு கூறியிருந்தான், நீங்கள் இப்போது காணும் உடல் முன்பு எனது ஆன்மாவின் இல்லமாக இருந்தது. இப்போது அது மண்ணுக்குத் திரும்பப் போகிறது. கோதுமை மணி மண்ணில் விழுந்து அழிவதைப்போல எனது உடலும் அழியும். ஆனால் உயிர்ப்பு நாளில், அழிந்த என் உடல் மீண்டும் உயிர்பெற்று என் ஆன்மாவில் இணையும் என்று பேசியிருந்தான். இது நம்பிக்கையின் முதிர்ந்தநிலை, எதிர்நோக்கின் பற்றுறுதி சாவை அச்சத்தோடு பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு அப்பேச்சு, எதிர்நோக்கையும் ஆறுதலையும் அளித்தது.

உலகப் பற்று என்னும் வேர்களால் பரந்து விரிந்து, நிரம்பிய மனித ஆன்மா என்னும் மரம் மரணத்தால் பிடுங்கப்படும்போது, ஆன்மீக வறட்சி யினால் ஆசையெனும் வேர்கள் அறுந்துபோக, அவை மீள்நடுகைக்கு உதவாமற் (நரகத்துக்குப்) போகின்றன. மாறாக வற்றாத ஜீவநதியாம் இயேசு என்னும் நம்பிக்கை ஊற்றின் அருகே வளரும் ஆன்மா, பிடுங்கப்படும்போது வேர்கள் அறுபடாமல், இலகுவாகப் பிடுங்கப்பட்டு மீள் நடுகை செய்யப்பட்டு மறுவாழ்வு பெறுகிறது.

உயிர்த்தெழுந்த இயேசுவிடம் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு சாவு அச்சம் தருகிறது என்றால், அவர்களுடைய நம்பிக்கை வெறும் வெளிவேடமே!

● செல்லத்துரை ஜெயராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைப்போட்டியில் வென்ற தாண்டவன்வெளிப் பாடகர் குழுவினர்

ஆண்டு தோறும் கொழும்பு டொன் பொஸ்கோ மன்றத்தினரால் நடாத்தப்படும் நாடளாவிய ரீதியில் கலைஞர்கள் பங்கு கொள்ளும் 'இயேசு கானங்கள்' இசைப் போட்டி இவ்வாண்டும் கொழும்பில் நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட பத்துப் பாடகர் குழுக்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் மட்டக்களப்பு தாண்டவன்வெளி புனித காணிக்கை அன்னை ஆலயப் பாடகர் குழுவினரும் கலந்து கொண்டு முதலிடத்தைப் பெற்று வெற்றிபெற்றுள் ளனர். சிறந்த பாடல், சிறந்த இசையமைப்பு, சிறப்பாக பாடியமை என அனைத்துக்குமான பரிசுகளையும் இவர்களே தட்டிக் கொண்டனர். சித்தார்த்தன் பாய்வா தலைமையில் இயங்கும் பாடகர் குழுவினரே இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பாராட்டுகள்!

## மன்னிப்பு கேட்பது இற்றுப்போன உறவைச் சீர் செய்யும்.

மன்னிப்புக் கேட்பது இற்றுப்போன மனித உறவுகளைப் சரிப்படுத்த ஒரு சிறந்த வழி. இதற்கு தான் செய்த தவறை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அநத உணர்வு நிலைதான் மற்றவர்களின் உணர்வுகளை மதிக்கும் தன்மைக்கு அடித்தள மாகும்.

தாம் தவறிழைத்துவிட்டோம் என்று அநேகர் நினைக்கின்றார்கள். மற்றவர்களிடம் மன்னிப்புக் கேட்டால், மற்றவர்கள் தம்மை அலட்சியம் செய்துவிடுவார்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் தம்மை அடியோடு மறந்து புறக்கணித்துவிடுவார்கள் என்ற பய உணர்வுகள் இருப்பதினால் மன்னிப்புக் கேட்பதில்லை.

இன்னும் சிலர் தம் தவறை ஒப்புக் கொண்டால் அத்தவறுக்கு உரிய தண்டனை கள் மற்றும் நஷ்டஈடுகள் கட்ட வேண்டி வரும் என்று அச்சப்பட்டு மன்னிப்புக் கேட்பதில்லை.

இதயத்தில் கர்வம் பிடித்தவர்கள்தான் தம் தவறை மறைக்கின்றார்கள். அவர்கள் வெளிப்படையாக மன்னிப்புக் கோருவதில்லை.

ஆகவே மன்னிப்புக் கேட்பதினால் பேச்சுத்தொடர்புக்கு வழிதிறக்கின்றது. வன்முறை யின்றி சச்சரவுகளைத் தீர்வுக்குக் கொண்டு வரமுடிகிறது. உறவுகளை மீளவும் கட்டியெழுப்பி மனித மாண்பைக் காக்க உதவுகின்றது.

- யாழ். ராதவல்லி

## நிலையாமை.

நீ...
நிற்கும் நிலத்திற்கு
சொந்தம் கொண்டாடுகிறாய்
நில்லாத நிலவிற்கு
யார் சொந்தம் கொண்டாடுவது?

அணியும் ஆடைக்கு
சொந்தம் கொண்டாடுகிறாய்
அவிழ்ந்த வானத்திற்கு
யார் சொந்தம் கொண்டாடுவது?

பெற்ற பிள்ளைகளுக்கு
சொந்தம் கொண்டாடுகிறாய்
பெறாத செடி கொடிகளுக்கு
யார் சொந்தம் கொண்டாடுவது...?

வாழ்கின்ற நாட்டிற்கு
சொந்தம் கொண்டாடுகிறாய்
சூழ்ந்த சமுத்திரத்திற்கு
யார் சொந்தம் கொண்டாடுவது?

சுற்றத்தில் உள்ளோரை
சொந்தம் கொண்டாடுகிறாய்
சுற்றும் காற்றுக்கு
யார் சொந்தம் கொண்டாடுவது?

வாழும் வாழ்க்கைக்கு
சொந்தம் கொண்டாடும் மனிதா
சூழும் மரணத்திற்கு-யார்
சொந்தம் கொண்டாடுவது.?

பெனி. யே. ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாதம் மட்டுந்தானா?

கார்த்திகை மாதத்தில் கத்தோலிக்கராகிய நாம் இறந்துபோன நம் பெற்றார், பிள்ளைகள், உறவினர், நண்பர்கள், உபகாரிகள், அன்பர்களுக்காக விசேடவிதமாகத் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கிறோம், செபிக்கின்றோம். ஏன்? அந்த மாதத்தில் நாம் இறந்தோருக்காக விசேடவிதமாகச் செபிக்கவும், நினைவு கூரவும் நம்மைத் திருச்சபை அழைக்கிறது. ஆம், நாமும் அம்மாதத்தில் திருப்பலிகள் ஒப்புக்கொடுத்தும் ஏழை எளியவர்க்கு அன்னதானம் செய்தும் வருவது வழக்கம். இது நன்மையான செயலே! எனினும் நாம் சிறிது சிந்திப்போமானால் இது போதாது



என்ற முடிவுக்கே வருவோம். சகல ஆன்மாக்களும் அம்மாதத்தில் மட்டுந் தான் வேதனை அனுபவிக்கிறார்களா? ஏனைய பதினொரு மாதங்களும் வேதனைப் படவில்லையா எனச்சிந்தித்துள்ளோமா? இல்லையென நான் எண்ணுகிறேன். நீங்களும் இவ் வினாவை எழுப்பி விடை காணுங்கள். அன்புள்ள நெஞ்சங்களே உத்தரிக்கும் ஆன்மாக்களுக்கு மிக மகிழ்ச்சியளிப்பது தாங்கள் நிச்சயமாக ஒரு நாள் மோட்சம் சேருவோம் என்னும் நம்பிக்கையாகும். அவர்கள் தங்களுக்காக மன்றாட முடியாதவர்களாயும் நமக்கு அதாவது உலகில் வாழ்பவர்க்காக மன்றாடக் கூடியவர்களாயும் நமது தேவைகளை இறைவனிடம் பெற்றுத்தரக்கூடியவர்களாயும் உள்ளனர். இந்த நல்ல செய்தி நம்மில் அநேகருக்குத் தெரியாமல் கவலையற்றவர்களாயிருக்கிறோம். இது நம்மையறியாது நாம் செய்யும் தவறுகள் என்றுதான் கூற வேண்டும். செபிப்பதற்குக் குறிக்கப்பட்ட நேரம் வேண்டுமா? இல்லை குறிக்கப்பட்ட நேரங்களில் மட்டுந்தான் செபிக்க வேண்டுமா? இல்லை எந்த வேளையிலும் செபிக்கலாம். நமது வீட்டுக்கடமைகளைச் செய்யும் போதும்- தெருவில் வாகனங்களில் பிரயாணம் செய்யும் போதும் மௌனமாக மனத்துள் செபிக்கலாம். இதற்கு நேரகாலம் தேவையில்லை. இந்தப் பழக்கம் நம்மில் இருக்குமானால், வளருமானால் எத்தனை



ஆன்மாக்களை நாம் மோட்சம் சேர்க்கலாம். அப்படி நாம் சேர்க்கும் ஆன்மாக்களின் உதவியும் நமக்குக் கட்டாயம் கிடைக்கும். எனவே நாம் பேசும் வீண் பேச்சுக்களையும் வாதங்களையும் குறைக்கலாம். அடியோடு நிறுத்தலாம். இவற்றால் நாம் எந்தப் பயனும் அடையப் போவதில்லையே! நரக நெருப்புக்கு ஒப்பான தீயில் வெந்து வாடும் ஆன்மாக்களைக் கைதூக்கி விடுவது நம் கடமையும், நலன் தரும் செயலுமாகும் என்பதை நாம் உணர்வோமாக!. நாம் அவர்களுக்கு உதவினால் நமக்காகவும் நாம் இறந்தபின், வாழ்வோரின் செபமும், தவமும், கிடைக்கும். எனவே குறிக்கப்பட்ட ஒரு மாதத்தில் மட்டும் வேதனைப்படும் இந்த ஆன்மாக்களுக்காக செபிக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மால் இயன்றளவு எந்த வேளையிலும் நாம் செபிக்கப் பழகுவோம். சிறு சிறு ஒறுத்தல்களை பிறர் சிநேகச் செயல்களை, தான தருமங்களை நமக்கு வாய்ப்புக் கிடைக்கும் எந்த வேளையிலும் செய்வோம். எம்மிலும் ஏழைகளுக்கு, உழைப்பில்லாமல் கஷ்டப்படும் அயலவர்க்கு, ஏழைச் சிறுவர் சிறுமியர்க்கு, அனாதை இல்லங் களுக்கு நாம் செய்யும் சிறிய சிறிய உதவிகள் நமக்கு அளப்பரிய மகிழ்வையும், மோட்ச இன்பத்தையும் தர வல்லன. பலர் இதை அறிந்திருப்பதில்லை, சிலர் இவற்றை அறிந்திருந்தும் செயற்படுத்துவதில்லை. அறியாமற் செய்யாதுவிடுவது குற்றமல்ல, அறிந்தபின் அதனைச் செய்யாதிருப்பது குற்றம் என்பதை நாம் அறிவோம். எனவே நம் இரட்சகரின் பொன் மொழிகளைப் பின்பற்று வோம். இவ்வுலகில் நாம் சேர்த்துவைக்கும் செல்வம் கள்வரால் திருடப் படும், புதைத்து வைத்த செல்வத்தையோ கறையான் அரித்து விடும். எனவே. நாம் நமது செல்வத்தை விண்ணுலகில் சேர்த்து வைப்போம். அங்கு திருட்டும் நடக்காது, கறையானும் அரிக்காது.

இதுவரை கூறியவற்றிலிருந்து செபிப் பதற்கு நேரம் குறிக்க வேண்டியதில்லை என்பது உண்மை. ஒரு கிறீஸ்தவனின் நாளாந்த வாழ்க்கையானது செபவாழ்வாக மலர்ந்து மணம் வீச நாம் அனைவரும் பிரதிக்கினையெடுப்போம்.

# அம்புறோஸ் பீற்றரின் 25வது ஒலி நாடா அன்னையின் பாடல்கள்

கிறிஸ்தவ ஒலிநாடாக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வரும் திரு. அம்புறோஸ் பீற்றரின் 25வது வெளியீடாக "அன்னையின் பாடல்கள்" என்ற ஒலிநாடா வெளிவந்துள்ளது. மடுமாதா, வேளாங்கண்ணி, ஆரோக்கியமாதா, வியாகுல மாதா, சகாயமாதா, பனிமயமாதா என மாதாவின் பெயர்களில் பாடல்கள் அமைந்துள்ளன. திரு. பீற்றர் அவர்களின் பாடல் வரிகளுக்கு பிரபல கிறீஸ்தவ இசையமைப் பாளரும், மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவருமான திரு. பெஞ்சமின் விமல்ராஜன் அவர்களும் திரு.ஏ. ஜே.பொஸ்கோ அவர்களும் இசையமைத்துள்ளார்கள்.

இலங்கை இந்தியக் கலைஞர்கள் குரல் வழங்கி சிறப்பித்துள்ளார்கள். பீற்றர் அவர்கள் திருவிவிலியத்தில் உள்ள திருப்பாடல் என்ற நூலில் அடங்கியுள்ள 150 சங்கீதங்களுக்கும் (திருப்பாடல்) 150 பாடல்கள் அமைத்து அவற்றை ஒலி நாடாக்களில் வெளியிட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

**ஆழியோன்**

## நற்கருணையின் புதுமை

மறைந்த பரிசுத்தபாப்பரசர் 2ம் ஜோன் போல் அவர்கள் இவ்வாண்டை நற்கருணை யாண்டாகப் பிரகடனம் செய்தார். நற்கருணை விசுவாசம் கத்தோலிக்கர்களின் பாரம்பரியமான பக்திப் பெருமுயற்சியாகும். நற்கருணையில் கிறிஸ்துவின் சரீரம் உண்டு என்பதே மறையுண்மை என கத்தோலிக்கத்திருச்சபை ஏற்றுக் கொண்டு ள்ளது. என்றாலும் ஒரு காலத்தில் உச்சமாயிருந்த கத்தோலிக்கர்களின் நற்கருணைப் பக்தி காலா காலத்தில் குறைந்துகொண்டே செல்வதுபோல் தோன்றுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் அண்மையில் புத்தகம் ஒன்று கைக்கு எட்டியது. புத்தகத்தின் தலைப்பு: நற்கருணை கிறிஸ்துவின் உண்மைச் சரீரம் (லான் சியானோபுதுமை) வெளியிட்டவர்: கலாநிதி. ஏ.ராஜா பிஞ்ஞேயிர முதற்பதிப்பானது 1987 மார்ச் 25ல் வெளியிடப்பட்டது இந்நூல் ஒரு மொழி பெயர்ப்பு நூலாகும்.

1225 ஆண்டுகளுக்கு முன்னர் லான்சியானோ என்னும் இடத்தில் நடந்த புதுமை பற்றி இப் புத்தகம் எடுத்தியம்புகின்றது EUCHARISTIC MIRACLE OF LANCIANO என்னும் ஆங்கில நூலின் தமிழாக்கமே இப் புத்தகம். இதன் 35ம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. எட்டாம் நூற்றாண்டில் ஒருநாள் லான்ஸியானோ நகரில் உள்ள புனிதர்கள் லெகான்சியான்-டாமிசியான் ஆலயத்தில் புனித பேசில் சபைக்குரு ஒருவர் இலத்தீன் முறையில் புளியாத அப்பத்துடன் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்தார். அப்பத்தையும் இரசத்தையும் வசீகரம் செய்தபின் திவ்விய நற்கருணையில் உண்மையாகவே இயேசு இருக்கின்றாரா என்ற பலத்த சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது. அப்போது நிகழ்ந்த அற்புதம் யாதெனின் அப்பம் கிறிஸ்துவின் உண்மையான சதையாகவும் இரசம் உண்மையான இரத்தமாகவும் மாறின. அது மட்டுமல்ல இரத்தம் உடனே உறைந்து வேறுபட்ட உருவங்கள் கொண்ட 5 துண்டுகளாகவும் உருமாறின. அதிர்ச்சியடைந்த அக்குரு நடந்ததை மூடிமறைக்க விரும்பினார், ஆனால் அவரால் தன்னைக்கட்டுப்படுத்த முடியாது போகவே நடந்த புதுமையை தனது விசுவாசிகட்கு எடுத்துரைத்தார்.

12 நூற்றாண்டுகளுப் பிறகு இன்றும் புதுமையாகக் கிறிஸ்துவின் சதையாகவும், இரத்தமாகவும் மாறிய இப்பரிசுத்த பண்டங்கள் குணம் மாறாமல் அப்படியே இருக்கின்றன. மேலெழுந்தவாரியாக ஆராய்ச்சி செய்கையில், கிறிஸ்துவின் சதையாக மாறிய திரு அப்பம் முன்பிருந்த பரிமாணத்தைக் கொண்டிருப்பதுடன் மரநிறத்துடன் சதை நார்களுடனும் விளக்கின் முன்வைக்கும் போது இளஞ்சிவப்பாகவும் காட்சியளிக்கின்றது. கிண்ணத்தில் உள்ள திரு இரத்தம் 5 இரத்தத்திரள்களாகவும் மஞ்சள் கலந்த மண்ணிறமாகவும் காட்சியளிக்கின்றது...

67ம் பக்கத்தில் பின்வருமாறு கூறப் பட்டுள்ளது. லான்சியானோவில் பாதுகாக்கப் பட்டுவரும் அதிசயம் நிகழ்ந்த அற்புத தசையை அறிவியல் அடிப்படையில் ஆராயவேண்டும் என்ற எண்ணம் தலத்திருச்சபையில் பேராயர் உட்பட திருச்சபை அதிகாரிக்களுக்கும் நீண்டநாட்களாகவே இருந்துவந்தது. கி.பி. 1970ம் ஆண்டு ஆரேஸோ நகரில் உள்ள பொதுமருத்துவமனையில் உள்ள பேராசிரியர் திரு. ஒடார்டோ லினோலி என்ற மருத்துவ நிபுணரிடம் ஆய்வு செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவரின் ஆராய்ச்சி முடிவுகள் வருமாறு,

1. லான்சியானோ நற்கருணைப்புதுமை இரத்தம் உண்மையிலேயே இரத்தமாகும்; தசையும் சந்தேகத்திற்கிடமின்றி ஒரு தசைப்பகுதியாகும்.
2. தசை இதயத்தசையின் ஒருபகுதிதான்.
3. தசையும், இரத்தமும் மனித சதையும், மனித இரத்தமும் ஆகும்.
4 இரத்தவகை (AB வகை) இரத்தத்திலும் தசையிலும் ஒன்றாக இருப்பதனால் அவை ஒரே மனிதருக்குச் சொந்தமானது எனக்கூறலாம்
5. நற்கருணைப் புதுமை இரத்தத்தில் காணப்படும் புரதச்சதவிகிதம் சாதாரண மனித னின் புதிய இரத்தத்தின் புரதசதவிகிதத்தோடு ஒத்திருக்கின்றது.
6. இரத்தத்தில் குளோரைட், பொஸ்பரஸ், மக்னீசியம், பொட்டாசியம், சோடியம் ஆகிய தாதுப் பொருட்கள் அளவில் குறைந்தும், கல்சியம் அதிகளவிலும் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சி முடிவுகள் அதிகாரப் பூர்வமாக அங்கீகாரம் பெற்று, பத்து வருடங்களுக்குப் பின்னர் 1981ம் ஆண்டு மீண்டும் பரிசோதிக்கப் படாத ஏனைய பகுதிகள் பரிசோதிக்கப்பட்டு முதற் சோதனைகளின் முடிவுகள் உறுதிப்படுத்தப் பட்டன. 1982ம் ஆண்டு ஏப்ரல் 28ம் திகதி வத்திக்கானின் அதிகாரபூர்வ செய்தி ஏடான 'லா சர்வத்தோரா ரொமானோ' இந்த ஆராய்ச்சியின் முடிவுகளை வெளியிட்டது.

லான்சியானோவுக்கு 1974ம் ஆண்டு நவம்பர் 3ம் நாள் பரிசுத்த தந்தை 2ம் அருள்சின்னப்பர் விஜயம் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பட்ட நற்கருணை முன்வணங்கி ஆராதனை செய்தார்.

**குறிப்பு : இப்புத்தகத்தில் இத்திருப்பண்டங்களைக் கொண்ட கதிர்ப்பாத்திரத்தின் வண்ணப்படங்கள் ஆய்வு கூடத்தில் நுணுக்குக் காட்டிமூலம் பெருப்பிக்கப்பட்டு தசை நார்களின் படங்கள், குருதிப்பரிசோதனை தொடர்பான படங்கள் என்பனவும் இணைக்கப்பட்டுள்ளன.**

**நித்திய ஸ்துதிக்குரிய பரிசுத்த திவ்ய நற்கருணைக்கு சதாகாலமும் ஆராதனையும் தோத்திரமும் நமஸ்காரமும் உண்டாக்கடவது.**

# 'சிறகடிக்கும் சிட்டுக்கள்'
## திருமறைக் கலமன்றத்தின் 40வது ஆண்டு நிறைவையொட்டி
# மட்டக்களப்பில் நடந்த கலைச்சங்கமம்



கலைவழி இறைபணியாற்றும் திருமறைக் கலாமன்றம் தமது 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பில் 'சிறகடிக்கும் சிட்டுக்கள்' என்னும் கலை நிகழ்வொன்றை நடாத்தியது. மட்டக்களப்பு தேவநாயகம் அரங்கில் ஒக்டோபர் மாதம் 16ம் திகதி நடைபெற்ற இக்கலைச் சங்கமத்தில் சிறுவர்கள் பங்கு கொண்ட நிகழ்ச்சிகளே பிரதான அளிக்கைகளாக அமைந்திருந்தன.

சிறப்பு நிகழ்வாக யாழ். திருமறைக் கலாமன்றக் கலைஞர்களின் பங்களிப்புடன் ஜோன்சன் ராஜ்குமாரின் நெறியாள்கையில் தயாரிக்கப்பட்ட 'கொல் ஈனும் கொற்றம்' என்னும் ஆற்றுகை இடம்பெற்றது. பாரம்பரியமும், நவீனமும் கலந்து குறியீடாகப் பொருளுணர்த்தும் கலை வடிவமாக இது அமைந்திருந்தது.

சிறப்புக்குச் சிறப்புச் சேர்ப்பதுபோல் மட்டக்களப்புப் பிரதேசத்தில் சமய, சமூக இலக்கிய நடவடிக்கைகள் அனைத்தையும் ஆசீர்வதித்து, உற்சாகப்படுத்தி, உதவிகள் வழங்கிவரும் திருகோணமலை- மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர். பேரருள்தந்தை ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். கிழக்குப்பல்கலைக் கழகப் பேராசிரியர் எஸ். மௌனகுரு அவர்கள் பாராட்டுரை வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்க, திருமறைக் கலாமன்றத்தின் உதவி இயக்குனர்களில் ஒருவரான ஜோன்சன் ராஜ்குமார் ஆயர் அவர்களுக்கு விருது வழங்கினார். இக்கலை நிகழ்வைத் திருமறைக் கலாமன்றத்தின் மட்டக்களப்பு கிளையினர்- மன்ற இணைப்பாளர் வள்ளுவன் சுவாமிநாதன் மற்றும் அங்கத்தவர் களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை தந்த சொந்தம்

சிவகலை

அழகாகக் கட்டப்பட்டிருந்த "போர்ட்டிக்கோ"வில் சூழவிருந்த பூஞ்செடிகளின் சுத்தமான காற்றை சுவாசித்து ஆழ்நிலையில் இருந்தான் அல்பேட். அவன் வங்கி முகாமையாளர். இன்று ஞாயிறு விடுமுறை. 'உடல் மாய்க்காத சொகுசு உத்தியோகம், விசாலமான வீடு, அள்ளக் குறையாத பணம். அன்பும், அழகும் நிறைந்த மனைவி. இத்தனையையும் இறைவன் பரிசாகக் கொடுத்தும், ஒன்றை மட்டும் ஏன்...ஏன் எனக்குத் தர மறுத்துவிட்டார்!?

விரக்தி நிறைந்த இந்தக் கேள்வியை இத்தோடு எத்தனை தடவைகள்தான் அவன் உள் மனம் உச்சரித்திருக்கும்!' அல்பேட் திருமணம் முடித்து பத்து ஆண்டுகளாகியும் இன்னும் ஒரு வாரிசு இல்லையென்பதுதான் அவனது பெருமூச்சுக்குக் காரணம்!

சிந்தனை தளர்த்தி சுயநினைவுக்கு அல்பேட் வந்தபோது, மனைவி டெல்மாவின் மிருதுவான விரல்கள் தலையைக் கோதின.

"என்னங்க... மணி ஒன்றாகப் போகுது.... சாப்பிடவில்லையா...? சாப்பிட்டுட்டே உட்காந்திருக்கலாமே..." அன்புத் தொல்லையால் அவனைச் சாப்பாட்டு மேசையில் கொண்டு அமர்த்தினாள் டெல்மா.

ஆவி பறக்கும் சாப்பாட்டின் வாசனை மூக்கைத் துளைத்தும், அல்பேட்டின் கை ஆசையின்றிச் சோற்றைப் பிசைந்தது.

"என்னங்க மரக்கறியெண்டதால சாப்பாடு இறங்குதில்லையா...? என்ன செய்யிறது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நம்மட வீட்டுல மரக்கறி காய்ச்சுறது வழமைதானே! அந்த இருதய ஆண்டவர் என்ர வயிற்றில பால் வார்ப்பாரென்று நம்பிக்கையோடு இருக்கிறன்". மனைவியின் நம்பிக்கைக்கு அவனால் என்னதான் கூறமுடியும். 'கடவுள்தான் உனக்கு இரக்கம் காட்டவேணும்' என அவன் உதடுகள் மெல்லிய புன்னகை உதிர்த்தது.

சாப்பிட்டுக் கைகழுவும்போது, உபதேசியார் அருளப்பு 'கோலிங் பெல்லை அழுத்தினார். அவரது கையில் 'வெட்டாப்பு' கட்டாக இருந்தது. அதில் ஒன்றை அல்பேட்டிடம் நீட்டியவர் "என்ன தம்பி.... முன்பெல்லாம் 'வெட்டாப்பு', 'தொண்டனுல' எல்லாம் உங்கட ஆக்கங்கள் அடிக்கடி வரும்... இப்ப ஒண்டையும் காணயில்ல.... சரியான பிஸியா?"

உபதேசியாரின் கேள்விக்கு டெல்மாவே பதிலளித்தாள். "இவர் இப்ப முன்பு மாதிரியெல்லாம் இல்ல. எதுலயுமே பிடிப்பில்லாம இருக்கிறோ். ஒழுங்கா சாப்பிர்றது கூட இல்ல" அவள் கூறியதற்குக் காரணம் என்னவென்பது ஊரில் ஒருவர் என்ற மட்டில் உபதேசியாருக்குத் தெரிந்திருந்தது. 'இன்னும் அல்பேட்டை ஏன் வேதனைப் படுத்துவான்' என்ற இரக்க சிந்தையுடன் அருளப்பு அவ்விடம் விட்டு நகர்ந்தார்.

'வெட்டாப்பை' மேலோட்டமாகப் பார்த்த அல்பேட் பின்புறமாகவிருந்த மரண அறிவித்தலைக் கண்டு விழிகளை வில்லென விரித்தான்! 'திருமதி அலன் நிர்மலா அகால மரணம்'



"என்னது...! அலன் நிர்மலா இறந்து விட்டாளா...? அவனுக்கும், நிர்மலாவிற்கும் ஏற்பட்ட பழக்கத்தை சில நிமிடங்கள் நிசப்தமாய் மீட்டினான்.

நிர்மலா, அல்பேட் போன்றே கலையுணர்வு மிக்கவள். அல்பேட்டின் ஆக்கங்கள் சஞ்சிகைகளில் வெளிவரும் போதெல்லாம் நிர்மலாவின் ஆக்கங்களும் அடிக்கடி வருவதுண்டு. அவளது தத்துரூபமான கவி வரிகளில் அல்பேட் எத்தனையோ தடவைகள் தன்னையே தொலைத் திருக்கிறான். இவனுடைய வாழ்வின் சோகங்களை அவள் நேரில் பார்த்தமாதிரி அதனை பிரதிபலிக்கும் ஆக்கங்களை நிர்மலா எழுதிய வேளையில்தான் அவளில் ரசனை ஏற்பட்டு தபால் மூலமாக இருவரும் நட்பை ஏற்படுத்திக் கொண்டனர். அல்பேட் மாதிரியே நிர்மலாவும் திருமணமானவள் தானாம். ஆனால் வாழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகத்திலும்கூட இருவருக்கும் எத்தனை ஒற்றுமை! நிர்மலா திருமணம் முடித்து குழந்தை வயிற்றில் இருக்கும்போதே கணவன் வன்செயலில் இறந்து விட்டானாம்! அவளுக்கோ பெறப்போகும் குழந்தையை வளர்ப்பதற்குக் கணவன் இல்லையென்ற குறை, இவர்களுக்கோ எல்லாமிருந்தும் பிள்ளை இல்லையென்ற குறை. இப்படியான சூழ்நிலையில்தான் தங்கள் பாசத்தை தபால்மூலம் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். சில நாட்கள் என்ன பிரச்சினையோ தெரியவில்லை, நிர்மலாவின் கடிதத் தொடர்பு படிப்படியாக நின்றுவிட்டது. சில நிமிடங்கள் அவன் சிறை கிடந்த ஞாபகங்களைத் தூசுதட்ட, "அந்த நிர்மலா இறந்துட்டாளா...? ஐயோ, இளம் வயசுல புருஷன இழந்த பெட்டை அவள். ஒரு பிள்ளையும் வேற. அவளுக்கா இந்த நிலை!" ஏற்கெனவே தேம்பிக் கிடந்த அல்பேட்டின் மனம் மௌனமாகக் குமுறியது.

மனைவி டெல்மாவிடமும் விஷயத்தைக் கூறிக் கவலைப்பட்டான். எப்படியாவது நிர்மலாவின் ஊர் சென்று அவள் குடும்பத்தாரிடம் துக்கம் விசாரிக்க வேண்டுமென அல்பேட்டின் அடிமனதில் ஓர் எண்ணம் தோன்றியது. ஓரிரு வாரங்களுக்குள் மனைவியையும் அழைத்துக் கொண்டு நிர்மலாவின் வீட்டை அடைந்தான்.

நிர்மலா வீதி விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்தாள் என்ற சம்பவத்தைக் கூறி நிர்மலாவின வயது முதிர்ந்த தாய் கண்ணீர் மல்கியபோது, அருகில் அழகான ஐந்து வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருத்தி தேம்பித் தேம்பி அழுதாள். "இந்தப் பிள்ளை...?" அது நிர்மலாவின் பிள்ளையென அறிந்த அல்பேட்டுக்கும், டெல்மாவிற்கும் பிள்ளைப் பாசம் பாகாய் உருகியது. அந்தச் சிறுகிளியை அள்ளி அணைக்க டெல்மாவின் தாய்மை தவித்தது! நிர்மலாவின் தாயாரிடம் தங்கள் குடும்ப நிலையையும் பரிமாறிக்கொண்ட டெல்மா, நிர்மலாவின் பிள்ளையை தங்களுக்குத் தரும்படியாக இறைஞ்சினாள். இறைவன் அவர்களை இனியும் சோதிக்க விரும்பவில்லை. நிர்மலாவின் பிள்ளையைப் பரிசாகக் கொடுத்தார். இயேசுவின் அருளால் அல்பேட் குடும்பமும் புத்துயிர் பெற்று மகிழ்ந்தது.

R. தேவகுமாரி

## S.V. P. சபையால் வீடுகள் கையளிப்பு

*"நாம் வன்செயல், வெள்ளப் பாதிப்புக்களின் போது கிராமம் தோறும் பற்பல உதவிகளை வழங்கிய போதிலும் ஏற்படாத ஒரு திருப்தி இன்று கத்தோலிக்கத் திருச்சபை சார்ந்த எமது பங்கு மக்களுக்கு புனித. வின்சன் டி போல் சபையால் வீடுகள் கையளிக்கப்பட்டதன் மூலம் ஏற்பட்டுள்ளது.*

*மேற்கண்டவாறு திருமலைப் பிராந்திய புனித. வின்சன் டி போல் சபையின் ஆன்மீக இயக்குனர் அருட்பணி. C.V. அன்னதாஸ் அடிகளார் கடந்த 27.08.2005 இல் பாலையூற்று அனா பல்நோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற வின்சென்சியன் ஒன்று கூடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.*

*இந்நிகழ்வுக்கு முன்னதாக திருகோணமலை மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப் பட்ட வசதியற்ற குடும்பங்களுக்கு திருமலைப் பிராந்திய S.V. P. சபையால் பத்து நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் ஆறு வீடுகள் உரிய குடும்பங்களிடம் கையளிக்கப்பட்டதோடு, பள்ளத்தோட்டம், உவர்மலைப் பகுதியில் மேலும் இரு வீடுகளுக்கு அடிக்கல்லும் நாட்டப்பட்டது.*

*திருகோணமலை மறைக்கோட்டத்தின் பங்குப்பணித்தளங்களில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு*



*வரும் புனித. வின்சன்ட் டி போல் சபையினர் தத்தம் பகுதிகளான கேணியடி, லிங்கநகர், பாலையூற்று, அன்புவழிபுரம், செல்வநாயகபுரம், ஆண்டாங்குளம் ஆகிய பகுதிகளில் 2 1/2 இலட்சம் ரூபாய் செலவில் மேற்படி வீடுகளை நிர்மாணித்திருந்தனர். இவ்வீட்டுத் திட்டத்திற்கு ஆசிய நாடுகளின் தேசிய S.V. P. சபையால் நிதி உதவி வழங்கப்பட்டது.*

*திருமலைப் பிராந்திய சபையின் தலைவர் சகோ. M.J. தவராஜா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வுகளில் அருட்பணி. அல்பன் ராஜசிங்கம் அ.ம.தி, அருட்பணி. கிறைட்டன் அவுட்ஸ்கோன் மற்றும் பங்கு, பாடசாலை ஆலோசனைச் சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

தகவல்: G. அல்பேட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ




### ஆபிரகாமின் அசைக்கமுடியாத விசுவாசம், கீழ்ப்படிதல், பிரமாணிக்கம்

ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை என எல்லோராலும் போற்றப்படுகின்றார். அவர் இறைவன் மேல் கொண்ட விசுவாசத்தையும், அதன் மூலம் பிறக்கும் கீழ்ப்படிதலையும், பிரமாணிக்கத்தையும் உணர்த்தும் சில சம்பவங்கள் மறை நூல் வழியாக எமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன.

✦ ஆதி 12:1-3 இல் இறைவன் அவரை அழைத்த போது "நீ உன் நாட்டையும் உன் இனத்தையும், உன் தந்தையின் வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நாம் காட்டும் நாட்டிற்குப் போகக்கடவாய்' என்றதும் உடனே கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, இறைவன் மேல் வைத்த விசுவாசத்தினால் முன் பின் அறியாத நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

✦ ஆதி 13:14-17 இல் ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி "நீ காண்கிற இந்தப் பூமி முழுவதையும் நாம் உனக்கும், உன்சந்ததிக்கும் தருவோம். மீளவும் கூடுமாயின் விண்மீன்கள் எத்தனை என்று எண்ணிப்பார். உன் சந்ததியும் அந்தளவு இருக்கும்."மீண்டும் (17:15) நாம் சாராயியை ஆசீர்வதிப்போம் அவள் வழியாக நாம் உனக்குத் தர இருக்கும் புதல்வனையும் ஆசீர்வதிப்போம்" என்று கூறுகிறார். இவ்வேளையில் ஆபிரகாமுக்கு நூறுவயதும், சாராயிக்கு 90வயதாகவும் இருந்தது. இது இயற்கையில் ஏற்றுக்கொள்ள முடியாததாக விருப்பினும், அவர்கள் மறுககவில்லை, விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டார்கள், கீழ்ப் படிந்தார்கள். இறைவன் தருவார் என முழுமனதுடன் ஏற்று விசுவசித்தார்கள்.


✦ மேலும் ஆதி 22:1-2 இன் படி இறைவன் கொடுத்த அந்த ஒரு மகனையும் தனக்குப் பலியிடும் படி கேட்கிறார். ஆபிரகாம் தயங்கவில்லை, கீழ்ப்படிகிறார், ஈசாக்கின் மூலம் தன் சந்ததியை எதிர்பார்த்திருந்தவருக்கு இறைவன் இவ்வாறு கேட்டதும் அதிர்ச்சியாய் இருந்திருக்கும். எனினும், அவர் இறைவன் மேல் வைத்த விசுவாசம் சிறிதும் தளரவில்லை. எனவே, கீழ்ப்படிகின்றார்; மகனைப் பலியிடுவதற்குத் தயாராகின்றார். இதிலும் இவர் இறைவன் மேல் வைத்திருந்த விசுவாசமும் கீழ்ப்படிவும் வெளிப்படுத்தப்படுகிறது. மற்றும், ஆதியாகமம் 23:12-16 இல் சாராள் இறக்கின்றாள், அவ்வேளை அவளை அடக்கம் செய்ய ஒரு துண்டுக்காணி கூட அவருக்குச் சொந்தமாய் இருக்கவில்லை. எனவே, எபிரோனிடம் ஒரு நிலத்தினை நானூறு சீக்கல் வெள்ளிக் காசுக்கு வாங்கி, அதில் மனைவி சாராயியை அடக்கம் செய்கின்றார். இதிலும், அவர் இறைவன் மேல் எந்தளவு விசுவாசம் வைத்துள்ளார் என்பது புலனாகிறது. நீ காண்கிற இப்பூமி முழுவதையும் உனக்குக் கொடுப்பேன் எனக் கூறிய இறைவன் இறுதியில் அவருடைய மனைவியை அடக்கம் பண்ணுமளவு ஒரு சிறு துண்டு நிலத்தினை வழங்க வில்லையாயினும் அவர் சிறிதளவும் இறைவன் மேல் வைத்த நம்பிக்கையில் இருந்து தளரவில்லை.

இவ்வாறு ஆபிரகாமின் விசுவாசத்தினால் அவர் விசுவாசத்தின் தந்தையாய் அனைவராலும் பாராட்டப்பட்டார். அவர் வாழ்க்கையில் இத்தகைய அசைக்கமுடியாத, தளர்ச்சியடையாத, விசுவாசத் தினாலும், கீழ்ப்படிதலினாலும், பிரமாணிக்கத்தினாலும் விசுவாசத்தின் தந்தையானார். இத்தகைய பண்புகளைத்தான் இறைவனும் இவரை அழைத்தபோது இவரிடத்தில் எதிர் பார்த்தார். இறைவனே இவருடைய விசுவாசத்தினை மெச்சுமளவிற்கு இவர் வேதாகமத்தில் இடம் பிடித்துள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## வெள்ளிவிழா நாயகன் அருட் சகோதரர் கிறேசியன் F.C அவர்களுடன் ஒரு செவ்வி

கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில், எப்பொழுதும் துறவிகளுக்குத் தனியிடம் உண்டு. பரிசுத்தப் பாப்பரசர், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட் சகோதரர்கள், அருட் சகோதரிகள் அனைவரும் உறவுகளைத் துறந்து , பாசங்களைத் துறந்து, பொது நிலையினரின் ஆன்மீக, சமூக நல விழுமியங்களுக்காக தம்மை ஒறுத்து வாழும் துறவிகள் ஆவர்.

இவற்றில் ஒவ்வொரு பிரிவினரின் பணி களும் ஒவ்வொரு வகையானவை. குருக்களின் பணிகள் வேறு, அருட்சகோதரர்களின் பணிகள் வேறு. எனினும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் முக்கியமானவை.

இவ்வகையில் அருட். சகோதரர் எஸ். கிறேசியன் பிள்ளை F.C. அவர்கள் தனது துறவற வாழ்க்கையின் 25ம் ஆண்டு நிறைவைக் கடந்த ஒக்டோபரில் கொண்டாடினார். எளிமையும், இனிமையும் கலந்த சுபாவம் உள்ள இவரை தொண்டனின் சில நிமிடங்களுக்காகப் பேட்டி கண்டோம்.

**➾ :- அன்புச் சகோதரர்கள் சபையைச் சேர்ந்த எஸ். கிறேசியன் பிள்ளை அவர்களே! உங்களுக்கு தொண்டன் சார்பிலும், அதன் வாசகர் சார்பிலும் எங்கள் வாழ்த்துக்கள். உங்களைப் பற்றி சில வார்த்தைகள் கூறுங்களேன்.**

✎:- (அமைதியாகச் சிரிக்கின்றார்). மன்னார் மடு வீதியில் அமைந்துள்ள இசைமாலைத் தாழ்வு என்னும் கிராமமே எனது பிறந்த ஊர். இது முருங்கனுக்கு அண்மையில் உள்ளது. நான் 1954 டிசம்பர் 12ம் திகதி பிறந்தேன். சிறு வயதில் தகப்பனார் காலமாகி விட்டார். 5ம் வகுப்புவரை இசை மாலைத் தாழ்விலேயே கல்வி கற்றேன். பின்னர் எட்டாம் வகுப்பு வரை முருங்கனில் படித்தேன்.

**➾ :- பின்னர்...**

✎:- எட்டாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திவிட்டு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வேலைக்குச் சேர்ந்து விட்டேன். 5 வருடங்கள் வேலை செய்துவிட்டு தனிப்பட்ட பரீட்சார்த்தியாக க. பொ. த (சா. தரம்) படித்து சித்தியடைந்தேன். பின்னர் 1976ல் புனித வளனார் சபையில் சேர்ந்து 1980ல் அருட்சகோதரர் ஆனேன். அதன் பின்னர்தான் 1982, 1983ம் ஆண்டுகளில் புனித மிக்கேல் கல்லூரியில் க. பொ. த (உ.தரம்) கற்றேன். அத்துடன் 1980 தொடக்கம் 1984 வரை மட்டக்களப்பு புனித வளனார் அனாதைகள் கத்தோலிக்க அச்சகத்தின் உதவி முகாமையாளராகக் கடமை புரிந்தேன்.

தொடர்ந்து 1984 தொடக்கம் 1991 வரை இளவாலையில் உள்ள மாணவர் இல்லத்திற்கு பொறுப்பாளராக இருந்தேன். 1991ல் கல்முனை பாண்டிருப்பிற்கு இடமாற்றம் பெற்றேன். அங்கும் மாணவர் இல்லப் பொறுப்பாளராக இருந்தேன். 1997ல் புனித வளனார் சபையின் மேலாளராகப் பொறுப்பேற்றேன்.

1999ல் திருகோணமலைக்கு இடமாற்றம் பெற்றேன். அங்கு எமது தொழிநுட்பக் கல்லூரியில் கடமை புரிந்தேன். 2000ம் ஆண்டு மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சகத்தின் முகாமையாளராகப் பொறுப்பேற்றேன். அடுத்து 2003ம் ஆண்டு தொடக்கம் ஹட்டனில் பணி புரிகின்றேன்.

**➾ :- நீங்கள் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடமை புரிந்திருக்கின்றீர்கள். அதன் பின்னர் அருட் சகோதரராக வாழ்க்கையை தெரிந்திருக்கின்றீர்கள். இம்மாற்றம் எவ்வாறு இடம்பெற்றது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

:- எனக்கு சிறுவயதிலிருந்து உள்ளூர ஓர் உந்துதல் இருந்தது. இதற்கு வடிவம் கொடுத்தது எனது ஆங்கில ஆசிரியை பிலோமினா ரீச்சர்தான். இவர் மட்டக்களப்புக்கு இடம் மாற்றம் பெற்றுச் சென்று அருட் சகோதரர்களுடன் தொடர்பு கொண்டு என்னை மன்னாரில் இருந்து மட்டக்களப்பிற்கு வரவழைத்து நான் அருட் சகோதரராக உதவினார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவர் தற்போது இங்கிலாந்தில் உள்ளார்.

**:- உங்கள் குடும்பத்தினர் இதற்கு உடன் பட்டனரா?**

:- எனக்கு அண்ணன்மார்கள் இருந்தபடியால் குடும்பச் சுமை இருக்கவில்லை. எனினும் அம்மாதான் சற்றுத் தயக்கம் காட்டினார். அவர் தற்போது உயிருடன் இல்லை.

**:- உங்கள் வாழ்க்கையில 'ஏன்தான் துறவற சபையில் சேர்ந்தேனோ தெரியவில்லை என்ற விரக்தி ஏற்பட்டுள்ளதா?**

:- ஒருபோதும் இல்லை. மிகவும் சந்தோசமாகவே பணி புரிகின்றேன். எங்களிடையே வேலைப்பகிர்வுகள் உண்டு. எனவே விரக்தி ஏற்பட வாய்ப்பே இல்லை..

**:- நீங்கள் புனித வளனார் சபையில் சேர்ந்ததாகச் சொன்னீர்கள். ஆனால் தற்போது உங்கள் சபை அன்புச் சகோதரர்கள் சபை என அழைக்கப்படுகின்றதே! ஏன்?**

:- புனித வளனார் சபையானது (S.S.J) இந்தியாவிலும், இலங்கையிலும் மட்டுமே இருந்தது. காலப்போக்கில் இந்தியாவில் சபையின் நடவடிக்கைகள் அற்றுப் போயின. இலங்கையில் மட்டுமே இச்சபை இயங்கி வந்தது. மட்டக்களப்பு, கல்முனை, ஹற்றன், திருகோணமலை, இளவாலை (மூடப்பட்டுவிட்டது) ஆகிய இடங்களில் சுமார் இருபது அருட் சகோதரர்களுடன் புனித வளனார் சபை இயங்கியது. அச்சகம், தொழில்நுட்பக் கல்லூரி, மாணவர் இல்லங்கள் என்பனவும் கற்பித்தல் நடவடிக்கைகளும் புனித வளனார் சபையின் பிரதான பணிகளாகும். இதற்கிடையில் சபைக்குள் புதிதாக அருட்சகோதரர்கள் உண்டாவது குறைவடைந்துவிட்ட படியாலும், வேறு சில காரணங்களாலும் புனித வளனார் சபையானது, அன்புச்சகோதரர்கள் சபையுடன் சங்கமமாகி விட்டது. இதற்கான மாபெரும் ஆராதனையானது கடந்த வருடம் புனித. மரியாள் இணைப் பேராலயத்தில் (மட்டக்களப்பில்) இடம்பெற்றது.

**:- உங்கள் துறவற அனுபவத்தில் உங்களது மறக்க முடியாத சம்பவம் என்ன?**

:- எனது இருபத்தைந்து வருட துறவற வாழ்க்கையில் 17 வருடங்கள் மாணவர் இல்லங்களை நடத்துவதில் கழித்துள்ளேன். இது மிகவும் இன்பமான அனுபவம். பொதுவாக குழப்படிக்கார பிள்ளைகளையே மாணவர் இல்லங்களில் கொண்டு வந்து சேர்த்து விடுவார்கள். அவர்களைக் கட்டுப்படுத்தித் திருத்துவதே பெரும் அனுபவம்.

**:- ஏனையோருக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?**

:- எனது வாழ்க்கையின் சகல சிக்கல்களுக்கும் தீர்வாக அமைந்தது மாதா பக்திதான். ஒவ்வொருவருக்கும் மாதா பக்தி அவசியம். அவவிடம் தஞ்சம் அடையுங்கள் எல்லாம் வெற்றி பெறும்.

இறுதியில் அருட்சகோதரருக்கு நன்றி கூறி விடை பெற்றுக் கொண்டோம்.

*குறிப்பு: அருட்சகோதரர் கிறேசியன் பிள்ளை F.C அவர்களின் 25 ஆண்டு கால துறவற வாழ்க்கையை முன்னிட்டு மட்டக்களப்பு-திருமலை ஆயர் அதி. வந். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் 2005.10.13 அன்று மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேராலயத்தில் கூட்டுத் திருப்பலி இடம்பெற்றது.*

● *பெஸ்லியோ வாஸ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனக்கோலம்

R. ஸ்ரான்லி பிரபாகரன்

## மனிதனும் உணர்வுகளும்

### ''கோபம்''வரும் போதும், வந்தபின்னரும், வராமல் தடுக்கவும் என்ன செய்யலாம்?

சென்ற இதழில் கோபத்தைப்பற்றிய ஒரு பொதுவான விளக்கத்தினைப் பெற்றுக்கொண்டோம். நாம் பலவேளைகளில் இந்தக் கோப உணர்வை எமது கவசமாகவும், பெருமைக்குரிய விடயமாகவும் காட்டிக் கொள்கின்றோம். இவை நல்லவை அன்று. பெரியவர் ஒருவரோ அல்லது அவரின்கீழ் இருக்கின்ற சிறியவர் ஒருவரோ தாம் கோபம் கொண்டதாகக் காட்டிக் கொள்வது இனிவரும் காலங்களிலாவது தவிர்க்கப்பட வேண்டும். இவ்வாறு காட்டிக் கொள்வதனால் பலருடைய அமைதியான சூழ்நிலை இல்லாமல் போய்விடும். பெரியவர் ஒருவர் தாம் எண்ணிய காரியத்தைத் தனக்குக் கீழ் இருப்பவர்கள் திறம்படவும் நேர்த்தியாகவும் செய்ய வேண்டும் என்பதற்காகத் தன்னைக் கோபத்தின் உருவமாகக் காட்டிக் கொள்கின்றார். இந்தச்சூழ் நிலையில் பலர் அவரை விரும்பாமல் விடக்கூடிய நிலை உள்ளது. அதேபோலத் தான் உதாரணமாக ஓர் உயர்தர வகுப்பு மாணவர் ஒருவர் தன்னைக் கோபம் கொண்டவராகக் காட்டிக் கொண்டு ஆசிரியர் ஒருவரின் குறித்த ஒரு நடவடிக்கையைக் கட்டுப்படுத்துகின்றார் எனவைத்துக் கொள்வோம். இந்தக் கட்டத் தில் அந்த மாணவர்பற்றிய நல்லெண்ணம் இழக்கப்படுகின்றது. இவ்வா றெல்லாம் பார்க்கின்ற போது கோபம் மனித சமூகத்தின் அழகான தோற்றப்பாட்டிற்கே வேண்டப்படாத தொன்று என்ற எண்ணம் தோன்றுகின்ற தல்லவா? அன்பும், மன்னித்தலும், விட்டுக் கொடுத்தலும், ஏற்றுக் கொள்ளுதலும் பூத்துக் குலுங்குகின்ற ஒரு இன்பவனத்திலும், விரும்பப்படாததொரு முட்பற்றையாக இக் கோபம் காணப்படுகின்றது. எனவே, இக் கோபத்தை எம்மிடம் இருந்து அகற்றுவது பற்றி என்ன என்ன காரியங்களைச் செய்து முயற்சிக்கலாம் எனச் சிந்திக்க வேண்டும்.

கோப உணர்வு மனிதனுள் இருத்தல் என்பது மனித உயிரின் பிறப்பு, வளர்ச்சி என்பன வற்றோடு தொடர்புடையதாகவும் காணப்படு கின்றது. மனித ஆளுமை விருத்திக் கோட்பாட்டின் அடிப்படையில் நோக்கினால் அவனது உருவாக்கத்தின் போது வந்து சேர்வதொன்றாகவே இது காணப்படுகின்றது என்பதைக் கண்டு கொள்ளலாம். ஒரு பிள்ளை கோப உணர்வுக்கு அடிமையாகாத வகையில் அதனை வளர்க்கக்கூடிய சாத்தி யப்பாடு நிறையவே உள்ளது. இதனைச் செய்வதற்கு மனிதனின் உளம்பற்றிக் கூறுகின்ற அறிவியல் கருத்துக்களில் தெளிவும், பொறுமையும் தேவை. அது ஒரு புறமிருக்க எமது அன்றாடவாழ்வில் பொதுவாகக் கோபம் வருகின்ற போது நாம் எவ்வாறு நடந்து கொள்ளலாம் என்பதையும், அதன் பாதிப்புக்களில் இருந்து விலகி எவ்வாறு நடந்து கொள்ளலாம் என்பதையும் பின்வரும் மூன்று பிரிவுகளின் அடிப்படையில் நோக்குவோம்.

1. கோபம் வந்தால் என்ன செய்யலாம்?
2. மற்றவருக்குக் கோபம் வருகின்றபோது நாம் எவ்வாறு நடந்து கொள்ளலாம்?
3. கோப உணர்வு ஏற்படாமல் இருக்க நாம் என்ன செய்யலாம்?

கோபம் வருகின்றபோது எமது உடல், உணர்வு, சிந்தனை இவற்றில் எத்தனை மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கவனிக்கவேண்டும். உடலில் இரத்தஓட்டம் அதிகரிக்கும். இதனால் கண்கள் சிவக்கின்றன. சிலர் கோப உணர்வின் உச்சநிலைக்கு செல்வதனால் தம்மைத்தாமே கட்டுப்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். கோப உணர்வில் வசப்பட்டு இருப்பவர் ஒருவர் தன்னைத்தானே கட்டுப்படுத்துதல் என்பது கடினமானதாகும். எனவேதான் இக்கோப உணர்வின் தன்மை அதன் விளைவுகள் என்பதை ஒருவர் அறிந்திருப்பது அவசியம் என்கின்றோம். ஒருவர் தான் கோபம் கொண்டுள்ள போது, தான் கோபம் கொண்டுள்ளேன் என்பதையும், அதன் அளவு என்ன என்பதையும் உணர்ந்து விட்டாரேயாயின் அவர் அக்கோபத்தை பக்குவமாகக் கையாள்வது எப்படி என்பதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிடுவார்.

கோபத்தை அடக்கினாலும் அபாயம், அதனை வெளிப்படுத்தினாலும் அபாயம் என்னும் ஓர் இக்கட்டான நிலை இதற்குண்டு. கோபம் வந்து அடக்கிவைத்தோமானால் அது மீண்டும் ஒருமுறை அதிகதாக்கம் தரும்வகையில் வெடித்து விடும். அதாவது இந்தக் கோபத்தின் வெளிப்பாட்டினால் மற்றவர்கள் எந்த அளவு பாதிக்கப்பட்டுவார்கள் என்பதைக் கவனித்துக் கொள்ளவேண்டும்.

மற்றவர்களுக்குப் பாதிப்பின்றி ஓரளவாக வெளிப்படுத்தப்படுகின்ற கோபம் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும்.

அடுத்து ஒருவருக்குக் கோபம் ஏற்பட்டு விட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் அவரே ஏற்க வேண்டும். கோபம் தனக்குள்ளேயே தோன்றிய உணர்வு என்பதை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டும். மற்றவர்தான் தன்னைக் கோபத்துக்குத் தூண்டினார் எனக் கூற முனைந் தால் அவரது கோபம் நீடித்துக் கொண்டே இருக்கும். ஏனெனில் தனக்குள்ளேயே இவர் கோபத்தை வைத்துக்கொண்டு அதனை நிறுத்து வதற்கான காரணியை தனக்கு வெளியே தேடினால் இது முடிவுறாத தேடலே ஆகும்.

அடுத்து மற்றவர்களுக்குக் கோபம் வருகின்றபோது நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருப்பதும் அவசியம். அதாவது, முதலில் மற்றவருக்குக் கோபம் வந்து விட்டதை நாம் இனங்காணக் கூடிய அளவு கவனமாக இருக்க வேண்டும். பொதுவாக நாம் உறவுகளை வளர்த்துக்கொள்கின்ற போது மற்றவர் களின் உணர்வுகளோடும் தொடர்புடையவர்களாக இருக்க வேண்டும். ஒருவருக்குக் கோபம் வந்து விட்ட பிறகும், அதனை உணர்ந்து கொள்ளாதவர் களாக, மீண்டும், மீண்டும் அவரது கோபத்தைத் தூண்டுகின்ற விடயத்தைச் செய்து கொண்டே இருத்தல் கூடாது.

மேலும் ஒருவரிடம் கோபம் தோன்றிய உடனேயே அவருக்கு ஆலோசனை கூறுவதோ, அவரது கோபத்தை அடக்க முயற்சி செய்வதோ தவறான காரியங்களாகும். கோபம் கொண்டவுடன் சற்று நேரம் விடவேண்டும். இவ்வாறு நேரம் கொடுப்பதனால் இயல்பாகவே கோபம் தணியும். அதன் பின்னர் நமது அடுத்தகட்ட நடவடிக்கை களை மேற்கொள்ளலாம். கோபம் கொண்டுள்ளவர் மற்றவருக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதற்கான நிலையை மிகவும் அண்மித்தவராக இருந்தால், நேரம் கொடுத்தல் என்பது பொருத்தமற்றதொன் றாகக் காணப்படும், வெள்ளம் வருமுன் அணை கட்டுவதே சிறந்தது. ஆதலால் நம்மிடம் கோபம் விபரீதமாகத் தோன்றாமலிருக்க நாம் என்னென்ன செய்யலாம் என்பதைச் சிந்திப்பதோடு அதனைப் பயிற்சியும் செய்து கொள்ளவேண்டும்.

பின்வருவன கோப உணர்வை எம்மிடம் குறைப்பதற்கான ஒரு சிலவழிமுறைகளாகும்.

1. கோபத்தின் விளைவுகளை ஒருவர் கூற பொறுமையாகக் கேட்டு அதனை உணர்ந்து கொள்ளல்.

2. கோபம் ஏற்படுகின்ற சூழலில் நாம் இருந்தால் உடனடியாக அந்த இடத்தைவிட்டு விலகிவிட வேண்டும்.

3. எனக்குள்ளே தோன்றுகின்ற கோபத்தைத் தூண்டுகின்ற காரணிகள் எவை எனப் பட்டியலிட்டு அவற்றை ஏற்றுக்கொள்ளவும், சகித்துக்கொள்ளவும் பயிற்சி செய்து கொள்ளல். உதாரணமாக அநீதியாக ஒருவர் நடந்து கொள்வது எனக்குக் கோபத்தை உருவாக்குகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் நான் முதலில் அநீதி புரிபவர் அறியாமல், வலுவின்மையால் செய்கின்றார் என்பதை ஆராய்ந் தறிந்து முதலில் சகித்துக் கொள்ள வேண்டும். இது இயல்பாகவே கோபத்தைக் குறைக்கும்.

4. எனது கோபத்துக்குக் காரணமானவரை எதிரியாகக் கருதி மனதில் அதைப் பதித்து வைத்தல் கூடாது.

5. எனது நண்பர் குழுவினரை வைத்துக் கொண்டு, யார்மீது எனக்குக் கோபம் உள்ளதோ அவரைப் பழிவாங்குவதை விடுத்து எனது நண்பர் குழுவினரிடம் எனது கோப உணர்வைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

6. போதிய அளவு தண்ணீர் அருந்துதல் உணர்வு களைச் சமப்படுத்தும்.

7. எனது உணர்வுகளுடன் தொடர்புடையவராக இருத்தல். நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேனா? துக்கமாக இருக்கின்றேனா, என்பதையெல்லாம் அடிக்கடி உணர்ந்து பார்த்தல்.

8. தன்னடக்கத்தை வளர்த்துக் கொள்ளல்.

9. நாவடக்கத்தைக் கைக்கொள்ளல். வரை முறையற்ற பேச்சு மற்றவர்களின் கோபத்தை வெளிக் கொணரத்தக்கது. அதேவேளை கோப உணர்வோடு இருக்கின்ற பேச்சு மற்றவர்களை மிகவும் ஆழமாகக் காயப்படுத்தக் கூடியது.

10. மூச்சுப் பயிற்சி இலகுவான உடற்பயிற்சிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.

11. முடியுமானால் யோகப்பயிற்சிகளை மேற்கொள்ளல்.

12. கோபம் உண்டாவதற்கான காரணிகளை விளக்கும் உளவியல் சார்ந்த நூல்களை வாசித்து அது தொடர் பான நிறைவான அறிவைக் கொண்டிருத்தல்.

மேற்சொன்னவிடயங்கள் ஒருசிலவே என்பதையும், இவற்றை விட தொடர்ச்சியான படிமுறைப் பயிற்சிகளால் கோப உணர்வை கையாள முடியும் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடமுடியும். ஆம், நம்மிடம் கோப உணர்வை வளர விட்டால் எமது ஆயுள்காலம் குறையும், ஆரோக்கியம் குன்றும். முகத்தின் மலர்ச்சி பிரகாசம் குன்றும், நண்பர்களை இழக்க நேரிடும், குடிப்பழக்கம் வன்முறை போன்றவை தோன்றும். எனவே, இவற்றினைக் கருத்திற் கொண்டு மனநலத்துடன் வாழ முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

## மேய்ப்புப் பணி மாநாட்டில் கேட்டவை!

- கத்தோலிக்க சமூக அபிவிருத்தி அமைப்புக்கள் அனைத்து மக்களுக்குமென பணியாற்று கின்றன. ஆனால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்குட்பட்ட கத்தோலிக்க மக்கள் இவற்றால் பயன் பெறுவதில்லை.

- 2500 திருவிவிலியப் பிரதிகள் மறைமாவட்ட மெங்கும் குறைந்த விலையிலும் இலவசமாகவும் விநியோகிக் கப்பட்டுள்ளன.

- எமது மக்களோடு உறவுகொள்ள, எமது மக்களுக்கு உதவிசெய்ய எமது அபிவிருத்தி நிறுவனங்களுக்கு மற்றவர்கள் கட்டுப்பாடு விதிப்பதென்றால் இந்த நிறுவனங்கள் எமக்குத் தேவையில்லை.

- அன்பியம் செபக்கூட்டமாகவே கூடிக் கலைகிறது. அன்பியம் சமூக மாற்றத்தை உருவாக்க வேண்டும். அதற்கான சூழ்நிலை இங்கு இல்லை. அப்படி இல்லை என்றால் தோல்வியே வரும்.

- அன்பியம் தனிக்குழுக்களாக மாறும் அபாயம் உள்ளது.

- அன்பிய நடைமுறைகளில் மாற்றம் தேவை. சமூகச் செயற்பாடுகள் ஊடாக அன்பியத்தை வளர்ப்பதே வெற்றிகரமான முறையாகும்.

- பின்தங்கிய கத்தோலிக்க மக்களுக்கு உதவ தனியான அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். முடியாவிட்டால் தற்போதுள்ள மனித சமூக பொருளாதார அபிவிருத்தி நிலையத்தில் இதற்கென்று தனியான ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும்.

- கத்தோலிக்க தொண்டர் ஆசிரியர்கள், நேர்முகத் தேர்வுகளில் புறக்கணிக்கப்படுகின்றனர்.

- கண்டன அறிக்கைகள் வெளியிடுவதால் பயனேதும் விளைகிறதா? அப்படியானால் அவைகளை வெளியிட்டு ஏன் ஆபத்துக்களை எதிர்நோக்கவேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழுவல்!

ஊருக்குள் ஓரிருவர்-அன்று
உசார் மடையராயிருந்தார்!
போருக்குப் பயப்படுவார் - கொஞ்சம்
போட்டுக்கொம்பிடுவார்!

'கொழுவல்' சவரியையும் - நம்ம
'கொம்பல்' வைரனையும்.
தழுவிப் பணிவிடைகள் - பார்த்த
தனவந்தருமிருந்தார்!

தெருவில் இவர்வரவைக் - கண்டு
தலையக் குனிபவரும்
சிரித்து மழுப்பிவிட்டு - முன்னால்
செல்பவரும் அன்றிருந்தார்!

'சரு'கில் மண் தூவிவிட்டு - சும்மா
சண்டைக்கு இழுப்பவரை
மரியாதைக்கஞ்சியவர் - பார்த்து
மனம் வெதும்பிப் பொறுத்திருந்தார்!

கொழுவலுக்குப் பெயர்பெற்றோர் - அன்று
கொஞ்சம்தான் ஆனாலோ
கொழுவியே வாழ்பவர்கள் - இன்று
கோடான கோடிபெறும்

ஒழுங்காகப் பணம் செலுத்தி - வீட்டில்
ஒளிபெறுவோர் இருளுக்குள்!
கொழுவிமின் விளக்கெடுப்போர் - நாட்டில்
கூத்தாடும் காலமிது!

ஒருவர்பின் ஒருவராக - இன்று
ஊரெல்லாம் ஓடுவதால்...
அரோகரா 'லைற்பில்' கட்டும் - எங்கள்
அப்பாவி மக்களுக்கே!

**கவிஞர். செ. குணரத்தினம்**

# நாள் வரும்!

பூசையில் வைத்த பூக்களை ஈனப்
புழுதிச் சருகுகள் பழிப்பதோ?
நேசமே கொண்ட நெஞ்சரை இங்கு
நீசர்கள் கூட்டம் இழிப்பதோ?

மின்னும் கதிரை நிலவைப் பார்த்து
மின்மினிக் கூட்டம் நகைப்பதோ?
அன்பாலுயர்ந்த மாந்தரைத் தீய
அதர்மர் குறைவாய் நினைப்பதோ?

காய்த்துக் கனிந்த கற்பகத் தருவை
காஞ்சிரம் மரங்கள் மறைப்பதோ?
வாய்மை தவறா வாச மனத்தரை
"வம்பர்கள்" பார்த்துச் சிரிப்பதோ?

பாயும் தீய பாம்புகள் தூய
பசுவினைக் கொடிதென வுரைப்பதோ?
தூய துறவு மனத்தரைப் பொல்லாத்
துரோகக் கும்பல் மிதிப்பதோ?

பூக்களில் மொய்க்கும் தேனீக்களை யோ!
புண்ணுறை ஈக்கள் பழிப்பது?
வாக்கொடு மனத்தில் வாஞ்சை கொண்டோரை
வஞ்சகர் தாமோ கழிப்பது?

மேதினியெங்கும் வேதனை தருவோர்
வேடம் கலையும் நாள் வரும்.
நீதியின் சினத்தில் நீள்புவி அதிர
நிச்சயம் தீமைகள் பாழ்படும்.

**கவிஞர். நிலாதமிழின்தாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓர் அறிவியல் பார்வை

# தொடர்பாடல்

வளர்ந்து வருகின்ற நவீன சமுதாயத்தில், நாம் தொடர்ச்சியான தொடர்பாடலை மற்றவர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளவேண்டியவர்களாக உள்ளோம். நமது கருத்துக்களையும் நோக்கங்களையும், கட்டளைகளையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் தொடர்பாடல் அவசியமாகின்றது. கருத்தற்ற தொடர்பாடல் பிரயோசனமற்றது. தெளிவான தொடர்பாடல் மூலமே சரியான கருத்துப் பரிமாற்றமும், புரிந்துணர்வும் ஏற்படும்.

1. தொடர்பாடல் செயற்பாட்டிற்கு நான்கு முக்கிய அம்சங்கள் தேவைப்படுகின்றன. அவையாவன; தொடர்பாடுபவர் (Communicator), செய்தி (Message), ஊடகம் (Medium), பெறுநர் (receiver). இவை நான்கும் ஒத்திசைந்து இயங்கும்போதுதான் தொடர்பாடற் செயற்பாடு வெற்றி பெறும்.

*தொடர்பாடுபவர்:* இவர் தான் தொடர்பாடுகின்ற விடயத்தில் போதிய ஞானம் பெற்றவராக இருக்கவேண்டும். பொருத்தமாக ஊடகத்தைத் தெரிவு செய்பவராகவும் அதில் பரிட்சயம் உள்ள வராகவும் இருக்கவேண்டும்.

*செய்தி:* தொடர்பாடுபவரின் மனதில் தோன்றும் கருத்துக்களே செய்தியாக உருமாற்றம் பெறுகின்றது. பெறுனர் விளங்கிக் கொள்ளும் மொழி யிலேயே செய்தி இருக்க வேண்டும்.

*ஊடகம்:* ஊடகம் ஒன்றின் மூலமாகவே தொடர்பாடல் இடம்பெறும். பரிமாற்றத்திற்குத் தேவையான பிரதான ஊடகங்களாக வாய்மொழி (Oral), எழுத்து (Written), புலக்காட்சி (Visual), ஒலி ஒளி சாதனங்கள் (Audio - Visual), இலத்திரனியல் சாதனங்கள் (Electronic) என்பன காணப்படுகின்றன. ஒவ்வொரு ஊடகங்களும் வெவ்வேறு வடிவங்களைக் கொண்டிருக்கலாம். உதாரணமாக எழுத்து ஊடகமானது கடிதம், அறிக்கை, துண்டுப்பிரசுரம் போன்ற வடிவங்களில் இருக்கலாம்.

*பெறுநர்:* இவர்தான் செய்தியைப் பெறுபவர். இவர் செய்தியைப் பெற ஆயத்தமாக இருக்க வேண்டும்.

2. மேற்படி நான்கு அம்சங்களும், இனங் காணப்பட்ட ஏழு படிமுறைச் செயற்பாடுகளின் ஊடாகச் செயற்படும்போதுதான் செய்திப் பரிமாற்றம் வெற்றி பெறுகின்றது.

படிமுறை 1 - தொடர்பாடுபவரின் உள்ளத்தில் செய்திக்கான கருத்து உண்டாக வேண்டும்.

படிமுறை 2 - தொடர்பாடுபவர் கருத்தை செய்தியாக மாற்ற வேண்டும்.

படிமுறை 3 - பொருத்தமான ஊடகம் மூலம் செய்தியை அனுப்புதல் வேண்டும்.

படிமுறை 4 - பெறுநர் செய்தியைப் பெற வேண்டும்.

படிமுறை 5 - பெறுநர் செய்தியை விளங்கிக் கொள்ள வேண்டும்.

படிமுறை 6 - பெறுநர் பதிலளிக்க வேண்டும்.

படிமுறை 7 - பெறுநர் தொடர்பாடுபவருக்கு பின்னூட்டல் செய்ய வேண்டும்.

3. தொடர்பாடல் மாதிரிகள் (Communication Models): எப்போதும் தொடர்பாடல்கள் சாமர்த்திய மானதாகவும் (efficiency) பயனளிக்க (effectiveness) கூடியதாகவும் இருக்க வேண்டும். அதாவது, பெறுநர் சரியான விதத்தில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும், செய்தியானது ஒரே நேரத்தில் அதிகளவான பெறுநர்களைச் சென்றடையக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி 1: (Model 1) :- நபரிடமிருந்து நபருக்கு (Person to person)

தொடர்பாடுபவர் அனுப்பும் செய்தியை ஒரேயொரு வர்தான் பெறுவார். (தொலைபேசி உரையாடல், தனிநபருக்கான கடிதம்)

மாதிரி 2 : (Model 2) :- தனி நபரிடம் இருந்து ஒரு குழுவுக்கு (Person ..to.. group)

குழுவில் குறிப்பிட்ட எண்ணிக்கையான நபர்களே இருப்பர். (வகுப்பறைக் கற்பித்தல்)

மாதிரி 3: (Model 3) :- தனி நபரிடமிருந்து பெரிய குழுவொன்றிற்கு (Person ... to ... gathering)

இங்கு அதிக அளவானோர் செய்தியைப் பெறுவர். (பொதுக்கூட்ட உரை, ஊழியர்க்கான சுற்றறிக்கை)

மாதிரி 4: (Model 4) :- தனிநபரிடமிருந்து மக்கள் கூட்டத்திற்கு (Person.. to .. Mass)

(செய்தித் தாள், வானொலி, தொலைக்காட்சி)

5. ஊடகம்: ஐந்து வகையான ஊடகங்களைப் பற்றி விளக்கமாகப் பார்ப்போம்.

1. *வாய்மொழி* (Oral) :

வாய்வழிச் சொற்கள் மூலமாக செயற்படுத்தப்படும் ஊடகம் இது. நேர்முக உரையாடல்கள், கலந்துரையாடல் கள், விவாதங்கள், விரிவுரைகள், பேச்சுக்கள் என்பன இதன் சில வகைகள் ஆகும்.

2. *எழுத்து மூலம்* (Written) :

செய்திகள் எழுத்துருவில் பதியப்படும். மீண்டும், மீண்டும் பாவிக்கப்படக்கூடியது தெளிவானது.

கடிதங்கள், சுற்றறிக்கைகள், அறிவித்தல்கள், துண்டுப் பிரசுரங்கள், செய்திப் பத்திரிகைகள், அறிக்கைகள் என்பன இதன் சில மாதிரிகள் ஆகும்.

3. *புலக்காட்சி* (Visual) :

புலக்காட்சி மூலம் செய்திகள் பதிவு செய்யப்படும். வரைபுகள், படங்கள், சுவரொட்டிகள், ஓவியங்கள், அட்டவணைகள்.

4. *கட்புல செவிப்புல சாதனங்கள்* (Audio Visual) :

இவை கட்புலன் வழியாகவும், செவிப்புலன் வழியாகவும் செய்திகளைக் கொடுப்பதால் செல்வாக்குமிக்கவை. தொலைக் காட்சி, சினிமா, ஒலி இழைப் பேழைகள் என்பன சிலவாகும்.

5) இலத்திரனியல் சாதனங்கள்: (Electronic)


இவை கணிணியால் அல்லது இலத்திரனியல் உபகரணங்களால் இயங்குபவை.

மின் அஞ்சல், டெலக்ஸ், பெக்ஸ், Video conferences, Tele conference என்பன சிலவகை யாகும்.

எனவே இவ்வகையான தொடர்பாடல்கட்கு நாமும் ஈடுகொடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

**- பெஸ்லீயோ வாஸ்**

## வாசகர் குரல்



தொண்டன் ஊழியர்கள் அனைவருக்கும் இறை ஆசீர் கலந்த வணக்கம். தொண்டனில் வரும் அனைத்து அம்சங்களும் பயனுடையவையாக இருக்கின்றன. எமது திருச்சபைக்கு உங்களைப்போன்ற ஊழியர்களின் பணி மிகவும் இன்றியமை யாததாகும். இறையரசைப் பரப்பும் பணியில் தொண்டனின் சேவை போற்றக் கூடியது. எல்லாப் பணியாளர்களையும் ஆசீர்வதித்து வழிநடத்த இறைவனிடம் இறைஞ்சுகிறோம்.

**திருமதி. அ. சகாயம்,** *ஸ்பிரிங்வெளி த.வி, ஸ்பிரிங் வெளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருச்சபையின் சமூக - பொருளாதாரக் கொள்கைத் திரட்டு பற்றிய படிப்பினைகளை விளக்குதலும், நடைமுறைப்படுத்தலும் 2006ம் ஆண்டுக்கான செயற்திட்டம்.**

**திரு/மட். மறை மாவட்ட மேய்ப்புப் பணிச் சபை மாநாட்டில் தீர்மானம்**

திருகோணமலை-மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் 2005ம் ஆண்டுக்கான மேய்ப்புப் பணிச்சபையின் மாநாடு கடந்த 4ம் 5ம் திகதிகளில் மட்.மன்ரேசா தியான இல்லத்தில் நடைபெற்றது.

மேய்ப்புப் பணிச்சபையின் தலைவரும், திரு/மட்.மறை மாவட்ட ஆயருமான பேரருட்தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்ற இம்மா நாட்டுக்கு மறை மாவட்டத்தின் மூன்று மறைக் கோட்டங்களில் இருந்தும் (திரு கோணமலை, மட்டக்களப்பு, கல்முனை) பங்குத்தந்தையர், ஆணைக் குழுக்களின் தலைவர்கள், துறவிகள், பொது நிலையினர் உட்பட பிரதிநிதிகள் வருகைதந்திருந்தனர்.

முதல் நாள் நிகழ்வில் 'அன்பியங்களும் திருச்சபையும்' என்னும் தலைப்பில் கிளரேசியன் சபையின் மாகாண முதல்வர் அருட்தந்தை டொமினிக் றொஹான் சிறப்புரை வழங்கினார். உரைக்குப்பின்னர் அது தொடர்பாகக் கலந்துரை யாடப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

நற்கருணை ஆண்டின் நிறைவை யொட்டி நற்கருணை ஆராதனை சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. இரண்டாம் நாள் நிகழ்வுகள் செபமாலை மற்றும் கூட்டுத் திருப்பலியுடன் ஆரம்பமாகின.

அன்று இடம் பெற்ற பொது அமர்வில் ஆயர் அவர்கள் உரையாற்றுகையில்: அன்பியத்துக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். தளர்வுகள் ஏற்பட்டாலும் மீளவும் முயற்சிக்க வேண்டும். என்ன வேலை செய்தாலும் நற்செய்திப்பணி என்னும் இலக்கை நோக்கி நாம் செல்லவேண்டும். பக்திச் சபைகள் அன்பியத்தினூடாக வலுப்பெற வேண்டும். எல்லாவற்றையும் ஒருங்கிணைக்கும் மையமாக அன்பியம் திகழ வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும் வரவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் பற்றி ஆயர் குறிப்பிடுகையில்,

வாக்களிப்பது நமது கடமை, நமது உரிமை: அதை நாம் புறக்கணிக்க முடியாது. சமாதானம், ஒற்றுமை போன்றவற்றைக் கட்டி எழுப்பக் கூடியவர்க்கே வாக்களிக்க வேண்டும்; எனவே நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்று கூறினார்.

கடந்த ஆண்டின் கூட்டறிக்கை ஆய்வுக்கு விடப்பட்டபோது, அன்பியச் செயற்பாடுகள் கத்தோலிக்க மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகள், தொழில் வாய்ப்புகள் போன்றவை விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டன. இவை தொடர்பான திட்டவட்டமான தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லையாயினும் 2006 ம் ஆண்டுக் கான செயல்திட்டமாக திருச்சபையின் சமூக, பொருளாதாரக்கொள்கைத்திரட்டு பற்றிய படிப்பினைகளை விளக்குதலும் - நடை முறைப்படுத்துவதும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்துடன் அன்பியத்தை மேலும் வளர்த்தெடுப்பதும் வரும் ஆண்டுக்கான மற்றொரு செயல்திட்டமாகவும் அறிவிக்கப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தார் புத்தாண்டு
## வழிபாட்டுப்பாடல்கள் தயார்!

எதிர்வரும் நத்தார் மற்றும் புத்தாண்டு சிறப்பு வழிபாடுகளில் பாடுவதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட பாடல்கள் தொகுக்கப்பட்டு ஒலிநாடாவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஒலிநாடாவின் விலை | - 150/= |
| தபாலில் பெற | - 190/= |

தொடர்பு:
சமூகத்தொடர்பு நிலையம்
அஞ்சல் பெட்டி எண் - 44
மட்டக்களப்பு


# சுவிச்சர்லாந்தில் நடைபெற்ற சிறுவர் சமாதான நிகழ்வு

விளையாட்டின் மூலம் சமாதானம் என்னும் தொனிப்பொருளில் சுவிச்சர்லாந்தில் நடைபெற்ற உலக சிறுவர் விழாவில் இலங்கையைச் சேர்ந்த சிறுவர்களும் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் ஆண்டு ஐக்கிய நாடுகள் அவையால் விளையாட்டின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்படுவதை முன்னிட்டு பசலோசி சிறுவர் நிறுவனம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இருபது நாடுகளிலிருந்து இருநூற்றியிருபது சிறுவர் சிறுமியர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். சுவிச்சர்லாந்தின் ஆரிச் நகருக்கு அருகிலிருக்கும் ட்ராகன் என்னும் இடத்தில் அமைந்திருக்கின்ற பசலோசி சிறுவர் கிராமத்தில் கடந்த ஆகஸ்ட் 13ம் திகதியிலிருந்து 27ம் திகதி வரை நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கையில் கலைவழி இறைபணியாற்றும் திருமறைக் கலாமன்றத்திலிருந்து பத்துச் சிறுவர்களும் இரண்டு மேற்பார்வையாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர். சிங்களம், தமிழ், முஸ்லிம், பறங்கியர் இனங்களை சேர்ந்த சிறுவர்களுடன் மேற்பார்வையாளர்களாக மட்டக் களப்பு திருமறைக் கலாமன்ற இணைப்பாளர் வள்ளுவன் சுவாமிநாதனும் அதே மன்றத்தைச் சேர்ந்த சுலக்ஷனா தங்கவேலும் இடம் பெற்றிருந்தனர்.

சிரித்த முகத்துடன் அன்புடன் பழகிய பசலோசி சிறுவர் நிறுவன ஊழியர்கள் சிறுவர்களுடன் அன்புடன் உறவாடி பயிற்ச்சிகளை வழங்கினர். காலையில் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பல பயிற்சிகள் வழங்கப் பட்டன. குறிப்பாக நான் யார்? அவன் யார்? அவனுக்கும் எனக்கும் உள்ள உறவு என்ன? அவன்



விருப்பு வெறுப்பு யாது? அவனது கலை கலாசாரம் என்ன? எனது கலாசாரத்தை அவன் ஏற்றுக் கொள்கிறானா? அவனது சமூகத்துடன் நான் இணைந்து கொள்கிறேனா போன்ற கேள்விகளுக்கு விடை அளிக்கக் கூடிய உறவாடும் பயிற்சியும், உளநலப் பயிற்சிகளும் வழங்கப் பட்டன.

இரவுகளில் கலை கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றன. உலகின் பல பாகங்களிலுமிருந்தும் வருகைதந்த பல தரப்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வுகள் தத்தம் கலை கலாசாரங்களை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்வதாக அமைந்திருந்தன. அதேவேளை அவர்களுக்கே உரிய பாரம்பரிய உணவு வகைகளும் பரிமாறப்பட்டன.

இடைக்கிடையே சுவிச்சர்லாந்தின் முக்கிய இடங்களைச் சுற்றிப்பார்ப்பதற்கான சந்தர்ப்பங்களும் கிடைத்தன இனம், மதம் மொழி இவற்றிற்கு அப்பால் ஒரு புதிய உலகம் சின்னஞ்சிறிய மலர்களின் சமாதானப் பயணமூடே மலர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்சகோதரி. எவறெல்டா அவர்களின் 90 வது பிறந்தநாள் திருகோணமலை கார்மேல் மடத்தில் 15.09.2005 அன்று வண. ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் நன்றித் திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. உறவினர்கள், அருட் தந்தையர்கள், அருட்சகோதரிகள், அன்பால் நெருக்கமானவர்கள் என பலரும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். திருப்பலி வேளையில் ஆயர் அவர்கள் ஆற்றிய உரையில் யாழ் மறைமாவட்டத்தில் தான் பொறுப்புள்ள பதவியில் இருந்தபோது இந்த அருட்சகோதரியின் 20 வருட முன்னேற்றகரமான சேவையையும் அந்த ஊர்மக்கள் அவர் மேல் கொண்டிருந்த பாசப்பிணைப்பையும் கண்டு வியப்புற்றதாகக் குறிப்பிட்டிருந்தார்.

எடுத்துரைத்தல் என் கடனாகும்.

53 பாடசாலைகள் உள்ள கோப்பாய் வட்டாரத்தில் அச்சுவேலி, புனித/திரேசா மகளிர் கல்லூரிக்குத் தனித்துவமான முதன்மை இடத்தைப் பெற்றுத்தந்தவர் இந்த அதிபர்தான் என்பது சகலரும் அறிந்த ஆணித்தரமான உண்மையாகும். வட்டாரம் முழுவதற்குமான மனையியல் பரீட்சைக்கூடம் இன்றும் அவர் பெயர் சொல்லி நிற்கின்றது. விளையாட்டு, கல்வி, வெளிக்களத் தொழிற்பாடுகள், கலைகள் எல்லாவற்றிலும் பாடசாலைக்கு முகவரி தேடித்தந்த சேவைக்கொரு சகோதரியை ஊர் மக்கள் தங்களுள் ஒருவராக நட்புடன் பழகினர். இன்றும் அவர்கள் மறக்கவே இல்லை.

முக்கனியின் விளைநிலமாகிய அச்சுவேலி, துறவிகளின் விளை நிலமாகவும் மாறியது இவரது

# தொண்ணூறாவது அகவையில்

## "தொண்டின் செல்வி"

## அருட்சகோதரி எவறெல்டா



காலத்திலதான். தனது இருபது வருட சேவைக் காலத்தில் எண்ணற்ற அருட் சகோதரிகளை உருவாக்கி கார்மேல் சபைக்கு அர்ப்பணம் செய்த உன்னத செயலை ஊரும் உலகும் நன்கறியும். இவர் வாய்மொழி கனிமொழி. தான் வாழ்ந்த மடத்தை மலர்வனமாக்கியதுடன் ஆதரவற்ற எத்தனையோ சிறுமியர்க்கு புகலிடமுமாக்கி பலரை வாழ வைத்த பெருமையைப் பாராட்டுதல் நம் கடனாகும். இருபது வருடங்கள் கடந்த நிலையிலும் அவரைப் பிரிய மனமில்லாத மக்களும் மாணவிகளும் மனம் கலங்கி மறியல் போராட்டம் செய்தனர். அந்த இடத்தை விட்டுப் பிரிந்த பின்னும்அவரது சேவையின் உச்சக் கட்டமாய் கொழும்பு மாநகரில் ஊனமுற்றவர்களுக்கென ஒரு மடத்தை உருவாக்கி உறங்காமல் உழைத்தார். அவர் உருவாக்கிய அந்தக் கொழும்பு மடத்திற்குக் கூட அச்சுவேலி மக்கள் பொருட்களை அனுப்பி வைத்ததாக அருட்சகோதரி எவ்றெல்டாவே என்னிடம் கூறியுள்ளார். நீண்ட பயணம் செய்த இந்தத் துறவிக்கு இறைவன் இன்னும் நீண்ட ஆயுளைக் கொடுக்க வேண்டுவோமாக.

அருட்சகோதரி எவறெல்டா அவர்களின் துறவற வாழ்வில் யாழ்/அச்சுவேலி புனித. திரெசா மகளிர் கல்லூரியில் தொடர்ச்சியாக இருபது வருடங்கள் அதிபராகத் தொண்டாற்றிய அந்தக் காலப்பகுதி மிகமுக்கிய இடத்தைப் பெறுகின்றது.

யாழ் மண்ணில் கார்மேல் அருட் சகோதரிகள் முதலில் கால் பதித்த இடம் அச்சுவேலியென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மண்ணின் மைந்தனாம் மறைந்த சேர். சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர் அவர்களால்தான் இந்த அரும்பணி நிறைவேற்றி வைக்கப்பட்டது. இப்பணிக்குத் தூண்டுகோலாகவும் பக்கபலமாகவும் இருந்தவர் காலம் சென்ற அருட்தந்தை. பாலசுந்தரம் அடிகளார் ஆவார். 1946ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் 1952ம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரிடம் அங்கு பயின்ற முதல் மாணவி என்ற முறையிலும் இன்று இந்த விழாவில் கலந்து கொண்டேன் என்ற நன்றிக் களிப்பிலும் அருட்சகோதரியின் அந்தப் பொற்காலம் பற்றி

பிறிஜ்ஜற் மரியாம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் போல் வாழ்வு



மனமே நோயின் பிறப்பிடம். மனம் கெட்டால் உடல் கெடுகிறது. மனம் பாதிக்கப்பட்டால் உடல் பாதிக்கப்படுகிறது. இதை அடிப்படையாகக் கொண்டு தான் டாக்டர் ஹானிமன் அவர்கள் நச்சுகள் (miasms) பற்றிய முடிவுக்கு வந்தார்.

இங்கு ஒரு விஷயத்தை நாம் மறந்துவிடக் கூடாது. மனம் கெடுவதற்குச் சூழ்நிலைகளே காரணம். நாம் கோபம் கொண்டால் உடலில் பாதக மான விளைவுகள் ஏற்படுகின்றன. கண் சிவக்கிறது. இரத்த ஓட்டம் மிகுதியாகிறது. ஜீரணம்பாதிக்கப் படுகிறது. இவ்வாறே மனதில் பயம் ஏற்பட்டால் உடல் நடுங்குகிறது. நாவறண்டு விடுகிறது. வியர்வை கொட்டுகிறது.

மனதில் ஏற்படும் களங்கங்கள் உடலில் நோயாக வெளிப்படுகிறது. இவ்வாறு வெளிப்படும் நோய்களுக்கு சோரா (Psora) என்ற நச்சுதான் காரணம் என்கிறார் ஹானிமன். சோராவை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் நோய்களை ஹோமியோபதி மருத்துவத்தில் சோரிக் (Psoric) என்று பெயரிட்டு அழைக்கின்றார்கள்.

எனவே நம் எண்ணங்கள் நல்லனவாக இருக்க வேண்டும். நம் எண்ணங்களே நமது செயலாக வெளிப்படுகிறது. சுருங்கச் சொன்னால் நமது எண்ணங்கள்தான் வாழ்விலும் எதிரொலிக் கிறது. நமது முன்னோர்கள் அந்த எண்ணங்கள் உதயமாகும் மனதை மனதிற் கொண்டுதான் "மனம்போல் வாழ்வு" என்றார்கள்.

புன்னகையை, மகிழ்ச்சியை வெளிப் படுத்துங்கள். உங்களுக்கும் புன்னகையும், மகிழ்ச்சியுமே பதிலாகக் கிடைக்கும். எதை நீங்கள் விதைக்கிறீர்களோ' அதைத்தான் அறுவடை செய்கிறீர்கள்.

எனவே சோகத்தையும், அச்சத்தையும் பரப்ப முயலாதீர்கள். உங்கள் பணியை மட்டும் நீங்கள் செய்யுங்கள். உங்களது பணி எப்போதும் நல்லதை மட்டும் எண்ணுவதாக இருக்கட்டும். நல்லதை மட்டுமே எப்போதும் நீங்கள் எண்ணும் போது நீங்கள் உற்சாகமாக இருக்கலாம். எனவே நீங்கள் எப்போதும் நல்லதையே எண்ணுங்கள், நல்லதைப் பேசுங்கள், நல்லதையே செய்யுங்கள். நல்ல எண்ணங்களால் உங்களது நாடி நரம்புகள் உற்சாகத்துடன் செயல்படும். எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பேன் என்று நினையுங்கள். மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது இயற்கைவிதி, இது எந்தக் காலத்திலும் மாறாதது.

மனிதனின் செயல்பாட்டிற்குக் காரணம் தங்களது மனதின் எண்ணங்களே. மனதில் தோன்றும் எண்ணங்களே மூளையின் மூலம் அறிவுறுத்தப்பட்டுச் செயலாகின்றது. இன்று இதை இவ்வாறு முடிப்பேன் என்று எண்ணுவதுதான் அதை அவ்வாறு முடிக்க வைக்கிறது.

எண்ணங்கள் உலகை ஆளுகின்றன என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண் மையாகும்! நாம் எதை எண்ணுகிறோமோ அதைப் போன்றே ஆகின்றோம். நல்லது எண்ணினால் நல்லது நடக்கிறது. தீயது எண்ணினால் தீமை கிட்டுகிறது.

உயர்ந்த எண்ணங்கள் நமது உடலில் புகுந்து இரத்தத்தைத் தூய்மைப்படுத்தி அதை நல்ல முறையில் ஓடச் செய்து, உடலுக்கு நலத்தை யும், வளத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. நமது மூளையில் தீய எண்ணங்கள் நுழைந்தால் நமது மகிழ்ச்சியைக் குறைத்து மனச் சோர்வை உற்பத்தி செய்துவிடுகின்றன.

நாம் ஒன்றைத் திரும்பத் திரும்ப நினை க்கும்போது அது வலிமை பெறுகின்றது. அதுவே செயலாகின்றது. ஆக எண்ணங்கள் பிறந்த பின்னரே செயல்கள் பிறக்கின்றன.

நமது எண்ணம் இளமைத் துடிப்புடன் இருந்தால்தான் நாமும் இளமையாக இருப்போம். நமது செல்களில் இளமைத் துள்ளலும், எதையும் சாதிக்க முடியும் என்ற உணர்வும் இருக்கும். எதையும் நாம் எதிர்மறையாக எண்ணக்கூடாது. அவை நம்மைப் படுகுழியில் தள்ளிவிடும் ; அதனால் நமது உடல் பாதிக்கப்படுகிறது.

தீய பழக்கத்தை விட்டுவிடு என்று உங்கள் குழந்தைக்குப் பாடம் சொல்லுவதைவிட நல்ல பழக்கத்தை வளர்த்துக் கொள் என்று அறிவுரை கூறுவதுதான் சிறப்பு. பொய் சொல்லாதே என்று வழிகாட்டுவதைவிட, எப்போதும் உண்மையே பேசு என்று வழி காட்டுங்கள். நல்லது பயக்கும்.

ஒருவனிடம் பிச்சை எடுக்காதே என்பதை விட உழைத்து உண் என்று ஆலோசனை வழங்குங் கள்; அது உடனே செயல் படுத்தப்படும். முன்னேற வேண்டும், முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்தான் முன்னேறுவார்கள்.

எனவே தூய்மையான எண்ணங்களை எண்ணுவோம்; நோய் நொடியின்றி வாழ்வோம்.

**மனநல ஆலோசகர். உ. அறவாழி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு
மட்டும்

முடிவுத்திகதி
30 - 11 - 2005




# விவிலியம் கற்போம் - 43

(விடுதலைப் பயணம் 18: 1–27)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மிதியானின் அர்ச்சகரும் மோசேயின் மாமனாருமாகிய இத்திரோ கடவுள் மோசேக்கும் அவர் தம் மக்களாகிய இஸ்ரயேலருக்கும் செய்தது அனைத்தையும் ................................ இஸ்ரயேலை எகிப்தினின்று வெளியேறச் செய்ததையும் கேள்வியுற்றார். மோசே முன்பு அனுப்பி வைத்திருந்த அவர் மனைவி ......................... வையும், இரு புதல்வர்களையும் இத்திரோ அழைத்துக்கொண்டு வந்தார். "அயல் நாட்டில் அன்னியனாக உள்ளேன்" என்ற பொருளில் ஒருவனுக்கு ...................... என்று மோசே பெயரிட்டார். என்னைப் பார்வோனின் வாளினின்று காப்பாற்றிய என் மூதாதையரின் "கடவுளே என் துணை" என்ற பொருளில் ........................... என்று மற்றவனுக்குப் பெயரிட்டிருந்தார். பாலைநிலத்தில் கடவுளின் மலை அருகில் மோசே பாளையம் இறங்கியிருக்க, அவருடைய மாமன் மோசேயின்............................ மனைவியோடும் அவரிடம் வந்தார். மோசேயும் அவரும் நலம் விசாரித்துக்கொண்டு பாளையத்தில் புகுந்தனர். இஸ்ரயேலின் நலனுக்காக ஆண்டவர் செய்ததையும், வழியில் தங்களுக்கு நேரிட்ட எல்லாத் தொல்லைகளையும், ஆண்டவர் ............................ அளித்தது பற்றியும் மோசே அவரிடம் கூறினார். இத்திரோ அகமகிழ்ந்தார். ஆண்டவர் ...................... என்றுரைத்தார். அவர் கடவுளுக்கு எரிபலியையும், பலிகளையும் செலுத்தினார். ஆரோனும் இஸ்ரயேலின் எல்லா .......................... அவருடன் கடவுள் திருமுன் உணவருந்தச் சென்றனர். மறுநாள் மோசே மக்களுக்கு நீதி வழங்க அமர்ந்தார். ..................... முதல் மாலை வரை மக்கள் மோசேயைச் சுற்றி நின்றுகொண்டிருந்தனர். இதைக் கவனித்த மாமனார், "இது எதற்கு" எனக் கேட்க மோசே "கடவுளின் ......................... நாடி மக்கள் என்னிடமே வருகின்றனர்" என்றார். அதற்கு அவர் "நீர் தனி ஆளாக இதைச் செய்ய முடியாது" என்று கூறிய அறிவுரையை ஏற்ற மோசே இஸ்ராயேலரிலிருந்து குழுத்தலைவர்களைத் தெரிந்து நியமித்து அவர்களையும் நீதி வழங்கச் செய்தார். மாமனாரும் தம் நாட்டுக்குத் திரும்பிச் சென்றார்.

**விடைகள்:** **தீர்ப்பை, ஆண்டவர், காலை, சிப்போரா, தலைவர்களும், கேர்சோம், எலியேசர், வாழ்த்தப்பெறுவாராக, புதல்வரோடும், விடுதலை.**

*(இவ்வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவுவை வளர்ப்போம் - 43

(சரியான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. தமிழ் மறை என்று போற்றப்படுவது
   (சிவபுராணம், திருக்குறள், திருவாசகம்)

2. குழந்தைகளுக்கு 'கிரெட்டினிசம்' என்னும் நோய் வராமல் தடுக்கும் இயக்கு நீர்
   (தைரொக்சின், இன்சுலின், பித்த நீர்)

3. அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவிருக்கும் நாடு
   (ஜப்பான், கனடா, சீனா)

4. அருட்பா பாடி ஆன்மீகம் வளர்த்தவர்
   (சுவாமி விவேகானந்தர், இராமலிங்க அடிகள், மாணிக்கவாசகர்)

5. சமஷ்டி ஆட்சி முறையே இலங்கைக்கு ஏற்றது என முன் மொழிந்தவர்
   (தந்தை செல்வா, பொன். இராமநாதன், ஜி.ஜி. பொன்னம்பலம்)

6. குரைக்கிற நாய் ..............................
   (துரத்தாது, கடிக்காது, ஓடாது)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் - 43
தொண்டன்
அ.பெ. எண் 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 41 விடைகள்

பாலை நில, முறையீடுகளை, காடைகள், மென்மையான, மன்னா, உணவாக, இரண்டுபடி வீதம், சேகரித்திருந்தனர், புழுவைத்து, உருகிவிடும்.

## அறிவை வளர்ப்போம் - 41 விடைகள்

1) ஜெயகாந்தன்  2) இந்தியா  3) வின்ஸ்ரன் சேர்ச்சில்
4) சொல்லு  5) பாலுமகேந்திரா  6) சீனா

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை அளித்து இசைநாடா பரிசு பெறுவோர்.**

- அ. பிரபாகரன் மஹிந்தன்
339, அன்பு வழி புரம்,
திருகோணமலை.

- அ. சரோஜினி
இல 183 B, சொறிக்கல்முனை,
அன்னைபுரம்,
சம்மாந்துறை.

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை அளித்து இசைநாடா பரிசு பெறுவோர்.**

- அ.கி. தயாளகுணசீலன்
இல 26, வேளாங்கண்ணி வீதி,
பாலையூற்று,
திருகோணமலை.

- N. நிலக்ஷன்,
93, திராய்மடு,
மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறுவோர்**

- கிறேசி போல்
38/6, கொத்தி ஒழுங்கை,
திருகோணமலை.

- ஆன் றிரோனி பேடினன்ஸ்
பழைய தபால் கந்தோர் வீதி,
கல்முனை .

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Registered as a News Paper in Sri Lanka.*

# காற்றில் கலந்துவரும்.....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## 2005 — டிசம்பர்

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் - காலை 5.50 மணி**

நாள்: 10-11-12-13 - ஜே.டேவிட்
14-15-16 - பெஸ்லியோ வாஸ்
24-25-26-27 - அருள்தந்தை.A. நவரெட்ணம்
28-29-30 - அருள்தந்தை இக்னேஸ் ஜோசப்

**சிறுவர் உலகம் - மாலை 6.30 மணி.**

நாள்: 06 - புனிதர்களை அறிவோம்.
- போட்டி நிகழ்ச்சி
- அமைப்பு பரதிப்பிரியா.

20 - கதையும் கருத்தும்.

**புதிய உலகம் - மாலை 6.30 மணி**

நாள்: 04 - திருநூல் வழிபாடு, திருச்சபைச் செய்திகள்
- சிந்தனை உரை, போட்டி, பாடல்கள்.

18 - நாடகம், கவிக்குரல் மற்றும்.
- பல்சுவை அம்சங்கள்.

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொகுப்பு : சமூகத்தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

*Wanasinghe Printers, 126/1, Trinco Road , Batticaloa*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org